Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 315

ஞாயிற்றுக்கிழமை
06 ஒக்ரோபர் 2024

புரட்டாதி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"இனித்தான் அநுரவுக்கு உண்மையாக சவால் இருக்குது கண்டியளோ"

# இலங்கையில் இன்னும் நிச்சயமற்ற நிலையே!

## இலங்கை தொடர்பில் நாணயநிதியம் அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 6

இலங்கை பொருளாதாரத்தில் முன்னேற்றங்கள் அடையப்பட்டாலும், நலிவுற்ற நிலையும், நிச்சயமற்ற தன்மைகளும் தொடர்கின்றன. ஆதலால், மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. 15

## பொதுத்தேர்தல் ஊடாக ஆட்சியைப் பிடிப்போம்!

### சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 6

பொதுத்தேர்தல் ஊடாக நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயற்சித்துவருகின்றோம் - என்று ஐக்கிய மக்கள் 15

### கடின முயற்சிகள் ஊடாக எட்டப்பட்ட

## இதுவரையான உடன்படிக்கைகளை பாதுகாக்க அநுர தரப்பு இணக்கம்!

### நாணயநிதியம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 6

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்சிப் பாதையில் கொண்டு செல்வதற்கு உதவிய, மிகக் கடினமான முயற்சிகளின் ஊடாக வென்றெடுக்கப்பட்ட அடைவுகளைத் தொடர்ந்து பாதுகாப்பதுடன், அவற்றை அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசெல்ல வேண்டியதன் அவ்சியத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக 15

## நாணயநிதியத்துடனான பேச்சுகளில் வெற்றி

### அநுர அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 6

உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழு மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான கொள்கை இணக்கப்பாட்டு நிபந்தனைகள் குறித்த பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முடிந்துள்ளன என்று 15



## டிஜிற்றல் துறைகளிலும் இந்தியா ஒத்துழைக்கும்

### பிரதமர் ஹரிணியிடம் ஜெய்சங்கர் உறுதி

கொழும்பு, ஒக். 6

இலங்கைக்கு தற்போது வழங்கும் ஒத்துழைப்பை விடவும், டிஜிற்றல் துறைகளில் கூடுதலான ஒத்துழைப்பை வழங்குவதற்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் 15

## ஜ.த.தே.கூட்டணியின் வன்னி வேட்பாளர்கள்

வவுனியா, ஒக். 6

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னித் தேர்தல் மாவட்டத்துக்கான வேட்பாளர்கள் ஓரளவு இறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன்படி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், ஜனநாயக போராளிகள் கட்சியின் செயலாளர் துளசி, மாகாணசபை முன்னாள் உறுப்பினர் க.சிவனேசன், கரைத்துறைபற்று பிரதேசசபை முன்னாள் தவிசாளர் க.விஜிந்தன், முருங்கன் பகுதி வர்த்தகரான அ.ரோஜர், முன்னாள் போராளியான கருணாநிதி ஜசோதினி ஆகியோரே இவ்வாறு போட்டியிடவுள்ளனர் என்று தெரியவருகின்றது. (அ-ம-110)

## பேருந்தில் விதிமீறல் அழையுங்கள் 1955

கொழும்பு, ஒக். 6

பேருந்தில் பயணிகளிடம் கட்டணம் அறவிட்ட பின்னர் அதற்கான பயணச்சீட்டையும், மிகுதிப் பணத்தையும் வழங்காத நடத்துநர்கள் தொடர்பில் பயணிகள் முறைப்பாடு செய்ய முடியுமெனத் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது. 15



## பஸில் ராஜபக்ச இனி வரமாட்டார்

கொழும்பு, ஒக். 6

அமெரிக்காவுக்குச் சென்றுள்ள பஸில் ராஜபக்ச மீண்டும் நாட்டுக்குத் திரும்பமாட்டார் 15

## உண்ணிக் காய்ச்சலால் மானிப்பாய் யுவதி பலி!

யாழ்ப்பாணம், ஒக். 6

உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் - மானிப்பாயைச் சேர்ந்த யுவதியொருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார். 15

## யாழ். போதனாவில் 7,500 நோயாளர்களுக்கு கண் சத்திரசிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கண்சத்திர சிகிச்சைப் பிரிவில் இந்த வருடம் இதுவரை 7 ஆயிரத்து 500க்கும் 15

## சிறுவனொருவன் சடலமாக மீட்பு!

முல்லைத்தீவு, ஒக். 6

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுவனொருவன் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

அந்தச் சிறுவன் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கலாம் என்று முதல் கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். வீட்டில் பெற்றோருடன் 15

சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விருப்புவாக்கு போட்டியைத் தவிர்ப்பதற்கு பொறிமுறை

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 6

தேசிய மக்கள் சக்தி கட்சியானது, நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்கான தமது வேட்புமனுப் பட்டியலை மாவட்ட ரீதியில் இறுதி செய்து வருகிறது. வேட்பாளர்கள் இடையே விருப்பு வாக்குகளுக்கான போட்டியைத் தவிர்ப்பதற்கான பொறிமுறையையும் தயார் செய்து வருவதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் நிஹால் அபேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

விருப்பு வாக்குகள் மூலம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அனைத்து உறுப்பினர்களும் நாடாளுமன்றத்துக்குள் நுழைவதை கட்சி உறுதி செய்யும். ஆயினும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களிடையே விருப்பு வாக்குகளுக்கான போட்டியைத் தவிர்ப்பதற்கான பொறிமுறையை உருவாக்கி வருவதோடு, போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களையும் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் அறிவிப்போம்.

ஏனைய கட்சிகளைப் போல் அல்லாது, தேசிய மக்கள் சக்தியின் நியமனப் பட்டியல் மாவட்ட ரீதியில் தயாரிக்கப்பட்டு வருவதோடு இறுதி செய்யப்பட்ட பட்டியல்கள் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் பரிசீலனை செய்யப்படும்.

தேசிய மக்கள் சக்தி தனது நியமனப் பட்டியலிலும் தேசியப் பட்டியலிலும் அதிகமான பெண் வேட்பாளர்களை உள்ளடக்கும். அத்துடன் தொழில் வல்லுநர்களும் அதற்குள் அடங்குவர்.

அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்கள் கட்சிக்குள் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது. கட்சியின் கீழ் போட்டியிடுவதற்கான ஏராளமான கோரிக்கைகள் வந்துள்ளன. அத்தகைய நபர்கள் மாவட்ட அளவில் நியமன வாரியங்களை கலந்தாலோசிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் - என்றார். (ஒ-இ)

# மைத்திரி வீட்டின் முன் சத்தம் எழுப்பிய பெண்

கொழும்பு, ஒக். 6

கொழும்பு, கறுவாத்தோட்டம் ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லமுன்றலில் வெள்ளைநிற காரொன்றில் வந்திறங்கிய பெண்ணொருவர் கத்தி, கூச்சலிட்டு முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு கடும் வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்ட பின்னர் அவ்விடத்திலிருந்து சென்றுள்ளார்.

இந்த நிலையில், அவரைக் கைதுசெய்வதற்காக தீவிர விசாரணைகளை கறுவாத்தோட்டப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மேற்படி சம்பவம் குறித்து முறைப்பாடளித்துள்ளதாக குறித்த பிரதேசத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். மேற்படி பெண் வந்திறங்கிய வெள்ளைநிறக் காரின் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு குறித்த பெண் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரும் வர்த்தகருமான டட்லி சிறிசேனவை குறிப்பிட்டே கடும் வார்த்தைப் பிரயோகத்தை மேற்கொண்டிருந்ததாக மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் வழங்கிய முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த பெண் வந்திறங்கிய காரின் இலக்கத்தை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் கறுவாத்தோட்டப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-இ)

# மக்கள் தீர்ப்பை மதிக்கின்றேன்

## ஜெய்சங்கரிடம் கூறிய ரணில்

கொழும்பு, ஒக். 6

இலங்கையில் இம்முறை மிகவும் அமைதியான முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியுள்ளோம். இந்தத் தேர்தலில் நாட்டு மக்கள் வழங்கிய தீர்ப்பை மதிக்கின்றேன்.

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உத்தியோகபூர்வப் பயணம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார். இதன்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார். புதிய அரசு இந்தியாவுடனான வலுவான உறவைப் பேணும் என்று நம்புவதாகவும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஒ-இ)

# நாடாளுமன்ற அரசியலுக்கு 30 அரசியல்வாதிகள் 'குட் பை'

கொழும்பு, ஒக். 6

9 ஆவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த உறுப்பினர்களில் சுமார் 30 பேர்வரை நாடாளுமன்ற அரசியலுக்கு விடைகொடுத்துள்ளனர். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, சமல் ராஜபக்ச, ஜோன் செனவிரத்ன, வாசுதேவ நாணயக்கார ஆகியோரே இந்த முடிவை எடுத்துள்ளனர். அத்துடன் பந்துல குணவர்த்தன, காமினி லொக்குகே, வினோநோகராதலிங்கம், சார்ள்ஸ் நிர்மலநாதன், சி.வி விக்னேஸ்வரன், சிசிர ஜயக்கொடி, விஜயதாஸ ராஜபக்ச உள்ளிட்டவர்கள் இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடாதிருக்கத் தீர்மானித்துள்ளனர். தேசியப்பட்டியல் ஊடாக சபைக்குவந்த திஸ்ஸ விதாரண, ஜீ.எஸ்.பீரிஸ், தம்மிக்க பெரேரா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அலிசப்ரி உள்ளிட்டவர்களும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவில்லை -இவ்வாறு சுமார் 30 நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் வரை பொதுத்தேர்தலில் களமிறங்கவில்லை எனத் தெரியவருகின்றது. (ச-44)

# மோடி மிக விரைவில் இலங்கை வரவேண்டும்

## ஜெய்சங்கரிடம் அநுர கோரிக்கை



கொழும்பு, ஒக். 6

வெகு விரைவில் இந்தியாவுக்கான சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளுமாறு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி விடுத்த அழைப்பை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கூறியதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் மிக விரைவில் இலங்கைக்கு வருகை தரவேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அழைப்பு விடுத்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ-இ)

# துப்பாக்கிகளை ஒப்படையுங்கள்

கொழும்பு, ஒக். 6

பொதுமக்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட அனைத்துத் துப்பாக்கிகளையும் மீளப்பெறுவதற்கு பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. 1916ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 6(1) மற்றும் 6(2) பிரிவுகளின் கீழ் பாதுகாப்புச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தற்காலிகமாக துப்பாக்கிகளை கையகப்படுத்தப்படவுள்ளது. அதன்படி, அனைத்துத் துப்பாக்கி உரிமதாரர்களும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள துப்பாக்கிகள் மற்றும் ரவைகளை அடுத்தமாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் வெலிசரயில் உள்ள இலங்கை கடற்படை முகாமில் ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)

# குருதிக்கொடை



கிளிநொச்சி, ஒக். 6

சிறுவர்தினத்தை முன்னிட்டு போரின் போது உயிரிழந்த சிறுவர்களின் நினைவாக கிளிநொச்சி மகா வித்தியாலய 2015 ஆம் ஆண்டு உயர்தர மாணவர் அணியினரால் 11 ஆவது குருதிக்கொடை வழங்கல் நிகழ்வு கிளிநொச்சி பழைய மருத்துவமனை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது இந்த ஆண்டின் சிறந்த சேவையாளர் விருது யாழ். பரியோவான் கல்லூரியின் ஓய்வு பெற்ற முதல்வர் வண.பிதா ஞானப்பொன்ராஜாவுக்கும், சிறந்த தொழில் முயற்சியாளர் விருது முன்னாள் போராளி மாற்று வலுவுள்ள சுயதொழில் முயற்சியாளர் சசிகலாவுக்கும், கற்பித்த ஆசிரியர் விருது கிளிநொச்சி மகா வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியை திருமதி புத்மானந்தனுக்கும் வழங்கப்பட்டன. நிகழ்வில் பாடசாலையின் முதல்வர், முன்னாள் முதல்வர், முன்னாள் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ஐ-25 ...)

# ஜனாதிபதி அநுர தொடர்பில் தெரிவித்தவை தவறானவை

## மல்வத்துபீடம் தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலின்போது அநுரகுமார திஸாநாயக்க தொடர்பில் ஒரு சிலர் வெளியிட்ட கூற்றுகள் அனைத்துமே பொய்யானவை என மல்வத்துப் பீடத்தின் மகாநாயக்க திப்பொட்டுவாவே சுமங்கல மாநாயக்க தேரர் தெரிவித்தார். தேசிய பிக்குமார் முன்னணியின் அங்கத்துவ பிக்குமார்கள் சிலர் மகாநாயக்க தேரரை சந்தித்த வேளையில் அவர் இவ்வாறு கூறினார். ஒரு சில பிக்குமார்கள் எல்லை மீறிச் செயற்பட்டுள்ளதாக இதன்போது தேசிய பிக்குமார் முன்னணியின் அங்கத்துவ பிக்குமார்கள் கூறியுள்ளார்கள். அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்ட பின்னர் ஏறக்குறைய இரண்டு வார குறுகிய காலப்பகுதிக்குள் நாட்டில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் பிக்குமார்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம் வாங்கிய உயரதிகாரிகள் கைது

## கொழும்பில் அதிரடி

கொழும்பு, ஒக். 6

**இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது மூன்று பஸ்களின் உரிமையை மாற்றுவதற்கு 3 இலட்சம் ரூபா இலஞ்சம் பெற்றதாகக் கூறப்படும் போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் உட்பட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

இவர்கள் கொழும்பு நாரஹேன்பிட்டிப் பிரதேசத்தில் உள்ள போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகத்தில் வைத்து இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளரும் அத்திணைக்களத்தில் பணிபுரியும் இரண்டு ஊழியர்களுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது, சந்தேகநபரான போக்குவரத்துத் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தன்னிடமிருந்த இலஞ்சம் பெற்ற பணத்தைக் கிழித்தெறிய முயன்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)

# தனித்துக் களமிறங்கும் ஈரோஸ் அமைப்பு

வவுனியா, ஒக். 6

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஈழவர் ஜனநாயக முன்னணி வடகிழக்கில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ளது.

ஈழவர் ஜனநாயக முன்னணியின் செயற்குழுக் கூட்டம் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே கட்சியின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தென்பகுதி மக்கள் தமக்குரிய தலைமையைத் தெரிவுசெய்துள்ளனர். கடந்த காலங்களில் தமிழ்த் தேசியம் என்ற நிலைமையை தக்கவைத்து தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டியிருந்தமையால் நாம் அரசியலில் தீவிரமாக ஈடுபடவில்லை. இன்று தமிழ்த்தேசியம் சீரழிந்து சிதறடிக்கப்பட்டு மக்கள் கலங்கிய குளத்தில் நீந்துகின்ற மீன்களாக உள்ளனர். பல்வேறு சக்திகளாலும் எமது மக்களின் வாக்குகள் கவரப்படுகின்ற பரிதாப நிலை இன்று ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் அனைவரும் ஒரே அணியாக திரண்டு ஈரோஸ் அமைப்பினூடாக போட்டியிடும் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவேண்டும் என்றார். ஊடக சந்திப்பில் கட்சியின் செயலாளர் இ.ராசநாயகம் மற்றும் தலைவர் துஸ்யந்தன், கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ஒ-110)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 6

ஒப்பந்த வேலைகள் தொடர்பான, அரச திணைக்களங்களிடமிருந்து தாமதமாகியுள்ள கொடுப்பனவுகளை விரைவாகப் பெற்றுக்கொடுக்க தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வடமாகாணக் கிளை நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது. இது குறித்து தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தினூடாக புதிய பிரதமருடன் பேச்சு நடத்திக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஏதுவாக கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாத ஒப்பந்தகாரர் அதற்கான விவரங்களை நாவற்குழியில் திருவாசகமனை முன்பாக இயங்கும் தேசிய நிர்மாணிகள் சங்கத்தின் வடமாகாணக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதுகுறித்த கலந்துரையாடல் 9ஆம் திகதி புதன்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-ரி)

# நிமால் அணி சிலிண்டரில்

கொழும்பு, ஒக். 6

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிமால் சிறிபால டி சில்வா தரப்பினர் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளனர். முன்னாள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார். (ஒ-இ)

# 19ஆண்டுகளின் பின் திறக்கப்பட்ட வீதி

கொழும்பு, ஒக். 6

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டி மெல் மாவத்தை செயின்ட் மைக்கேல் சுற்றுவட்டத்திலிருந்து அலரிமாளிகையை ஒட்டிய ரொட்டுண்டா சுற்றுவட்டம் வரையிலான பகுதி பாதுகாப்புக் காரணங்களுக்காக 2005 இல் மூடப்பட்டது. 19 வருடங்களின் பின்னர், பாதுகாப்பு அமைச்சின் தலையீட்டால் இந்த வீதி நேற்றுமுன்தினம் பொதுமக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. வீதிச் சீரமைப்புப் பணிகள் நடைபெறுவதால் ஒரு திசையில் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படும். சீரமைப்புப் பணிகள் முடிவடைந்தவுடன், இரு பாதைகளிலும் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-இ)





# யாழ். கல்வி வலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஒக். 6

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின், 2024 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா நேற்றுச் சனிக்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானத்தில், யாழ். கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி யமுனா ராஜசீலன் தலைமையில், இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர் கே.ஜே.பிறட்லி பங்கேற்றார். சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் கலந்து சிறப்பித்தார். இதன்போது யாழ். கல்வி வலயத்தின் 34 பாடசாலைகளின் 84 அணிகளைக் கொண்ட 1008 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர் (ச-27)

# ஓர் அரசியல் கட்சியே வேட்புமனு

கொழும்பு, ஒக். 6

எதிர்வரும் பொதுத்தேர்தலுக்காக இதுவரை அரசியல் கட்சி ஒன்றும், சுயேட்சை குழுக்களும் 5 மாவட்டங்களில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய பத்தரமுல்ல சீலரத்ன தேரர் தலைமையிலான ஜனசெத பெரமுன யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளது.

கொழும்பு, களுத்துறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 3 சுயேச்சைக் குழுக்கள் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன. (ஒ-இ)

# தேசிய மக்கள் சக்திக்கு குவியும் விண்ணப்பங்கள்

கொழும்பு, ஒக். 6

பொதுத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடுவதற்கு பலரும் முன்வந்துள்ளனர். மாவட்டம்தோறும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் இருந்து தகுதியானவர்களை, ஊழல் மோசடி மற்றும் குற்றப் பின்னணி அற்றவர்களை வேட்பாளர்களாக தேசிய மக்கள் சக்தி உள்வாங்கும் என அறியமுடிகின்றது. குறிப்பாக வேட்பாளர்களுக்கு முன்னுரிமையும், முக்கியத்துவமும் வழங்கப்படவுள்ளது என்று கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். பொதுத்தேர்தலுக்குரிய வேட்பு மனுக்களை 8 ஆம் திகதியில் இருந்து தாக்கல் செய்ய தேசிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது. (ஒ-இ)

# விழிப்புணர்வு சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 6

உலக இருதய தினத்தை முன்னிட்டு சைக்கிள் ஓட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை முன்பாக ஆரம்பமாகவுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை உத்தியோகத்தர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட உத்தியோகத்தர்கள், வடமாகாண சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை உத்தியோகத்தர்கள் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## காந்தி ஜெயந்தி கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ்ப்பாணத்தில் சைக்கிள் பேரணி மற்றும் மரம் நடும் விழாவுடன் காந்தி ஜெயந்தி கொண்டாட்டமும் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்திலிருந்து கார்கில் சதுக்கம் வரை சைக்கிள் பேரணியின் ஏற்பாட்டுடன் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. வடமாகாண செயலாளர் எல்.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.ஸ்ரீசற்குணராஜா, யாழ். நகராட்சி ஆணையரும் யாழ்.போதனா மருத்துவமனை இயக்குநர் டாக்டர் சத்தியமூர்த்தி, மதத் தலைவர்கள், துணைத்தூதரக அதிகாரிகள், காந்தி சமாஜத்தின் பொறுப்பாளர்கள் மற்றும் பொதுமக்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ரி)



## சிறுவர் தின நிகழ்வுகள்

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய சமூகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ரி-9)



## டென்மார்க்கில் திலீபன் நினைவு

டென்மார்க், ஒக்.6

டென்மார்க் கோர்சன்ஸ் மற்றும் கொல்பேக் நகரங்களில் எழுச்சியுடன் தியாக தீபம் திலீபனின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடர் ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து தியாக தீபம் திலீபன் மற்றும் கேணல் சங்கரின் திருவுருவப் படத்துக்கு ஈகைச் சுடரேற்றப்பட்டது. தொடர்ந்து நாட்டுப்பற்றாளர்களையும் நினைவேந்தி அகவணக்கம் செலுத்தப்பட்டது. (ரி)

## நினைவஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.6

தென்மராட்சிவலயக் கல்விப்பணிமனையில் பணிபுரிந்து கடந்த ஏப்ரல் மாதம் விபத்தில் உயிரிழந்த தொழில் வழிகாட்டல் அதிகாரி அமரர் க.ஈஸ்வரனின் நினைவஞ்சலி நிகழ்வு கைதடி சேதுகாவலர் வித்தியாலய அதிபர் செ.சிறீஸ்கந்தராசா தலைமையில் மட்டுவில் கிழக்கு வில்சன் சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் அமரர் க.ஈஸ்வரனின் துணைவி திருமதி நளாயினி, வில்சன் சனசமூக நிலையத்தின் தலைவர் மு.சந்திரசேகரம், பனை அபிவிருத்திச்சபையின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் திருமதி கா.கோபாலகிருஷ்ணன், மனித உரிமை சட்ட ஆலோசகரும், சமூகசேவை செயற்பாட்டாளருமான திருமதி சித்திரா தேவி ஆகியோர் கலந்துகொண்டனர். அமரர் ஈஸ்வரனின் நண்பர்களின் அனுசரணையுடன் பின்தங்கிய குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்திட்டமும் இதன்போது அறிமுகம் செய்யப்பட்டது. (ச-25,131)



## விழிப்புணர்வுப் பேரணியும், கருத்தரங்கும்!

யாழ்ப்பாணம், ஒக்.6

பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுப் பேரணியும், விழிப்புணர்வு க் கருத்தரங்கும் பருத்தித்துறையில் கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது. பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி திருமதி பிரிந்திகா செந்தூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதல் நிகழ்வாக பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை முன்பிருந்து பேரணியாக பருத்தித்துறை பிரதேச செயலகம் வரை விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. பேரணியில் விழிப்புணர்வு கருத்துகளை புற்றுநோய் விசேட மருத்துவ நிபுணர் தனேந்திரன் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி செந்தூரன், பருத்தித்துறை பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். நிகழ்வில் வடமராட்சி வடக்கு பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள், பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், தாதியர்கள் மற்றும் ஊழியர்கள், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகஸ்தர்கள், மாதர் சங்க உறுப்பினர்கள், தாய்மார் கழக உறுப்பினர்கள், லயன்ஸ் கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-27)

## உணவுத் திருவிழா

யாழ்ப்பாணம், ஒக்.6

கோப்பாய்ப் பிரதேச செயலக சுதேச மருத்துவ அபிவிருத்திப் பிரிவு, சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு ஆகியவற்றின் ஏற்பாட்டில் உணவுத் திருவிழா பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் யாழ்.புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பாரம்பரிய உணவுக் கண்காட்சியும் விற்பனையும், சித்த மருத்துவ முகாம், ஆயுள்வேத மருந்து விற்பனை, மூலிகை எண்ணைத் தயாரிப்பும் விற்பனையும், யோகாப் பயிற்சிநெறி மற்றும் புத்தகக் கண்காட்சி என்பன இடம்பெற்றன. (ச-25,66)





## சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 6

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் சிறுவர் தின நிகழ்வு அதிபர் தலைமையில் கல்லூரி பிரதான மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதன்போது மாணவர்களிடையே பல போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டதோடு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அத்தோடு அதிபர், ஆசிரியர்களால் மாணவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்பட்டது. (ச-25,131)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்களை ஒடுக்க முயற்சியா?

வவுனியா, ஒக். 6

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டத்தை திட்டமிட்டு ஒடுக்க முயற்சிக்கும் செயற்பாட்டை வன்மையாகக் கண்டிப்பதாக வட கிழக்கு வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தின் நிர்வாகிகள் கூட்டாகக் கண்டித்துள்ளனர்.

வவுனியாவில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததா வது:-

வடக்கு - கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களையும் சேர்ந்த, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங் கங்கள் சிறிலங்கா பொலிஸார், புலனாய்வுத் துறை யினர் என பலதரப்பட்டவர்களால் அச்சுறுத்தல் களை எதிர்கொள்கின்றனர். சர்வதேச சிறுவர் தினத் தில் வவுனியாவில் நாம் போராட்டம் முன்னெடுத்த போது, அங்கு வந்த நபர் ஒருவர், 'தான் ஜனாதிபதி அநுரவின் ஆள்' என்று கூறிப் போராட்டம் செய்ய வேண்டாம் என எச்சரித்தார்.

அவர் ஜனாதிபதி அநுரவின் ஆளோ, பொலிஸாரின் ஆளோ அல்லது புலனாய்வுத்துறையின் ஆளோ தெரியாது. இங்கு குழப்பத்தை ஏற்படுத்தியவருக் கும் அவரை இயக்குபவருக்கும் நாம் வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம். எமது போராட்டத்தை குழப்ப வரும் எவரானாலும் ஒன் றைப் புரிந்து கொள்ளவேண்டும். நாம் உறவுகளை உயிருடன் ஒப்படைத்துவிட்டு அவர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றோம். இந்தப் போராட்டத்தில் எம் முடன் இருந்த 280க்கும் மேற்பட்ட உறவுகளை நாம் இழந்துவிட்டோம். இதற்கு யாருமே பதில் சொல்ல முன்வரவில்லை என்பதையும் சுட்டிக்காட் டுகின்றோம். ஆகவே எமது போராட்டம் நீதி கிடைக் கும் வரை தொடரும் என பிரகடனப்படுத்துகின்றோம் - என்றனர். (ஓ-110)



# அரச, தனியார் பஸ் சேவை சிக்கல்கள் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.6

வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையி னருக்கும், வடக்கு மாகாண தனி யார் போக்குவரத்து சபையின ருக்கும் இடையிலான கலந்து ரையாடல் வடக்கு மாகாண ஆளுநர்நா. வேதநாயகன் தலை மையில் ஆளுநர் செயலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற் றது.

கலந்துரையாடலில் தனியார் போக்குவரத்துச் சபையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரை யாடப்பட்டதோடு தனியார் பேருந்து நிலையம், பஸ் தரிப்பிடங்களில் காணப்படும் வசதிவாய்ப்புகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பா கவும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் தனியார் பேருந்து சேவை யாளர்கள் பாதை வழித்தட உரி மத்தின் பிரகாரம் பாதை வழித்த டம் சரியாகப் பின்பற்றப்படாமை, நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பாகவும் வடக்கு ஆளுந ரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

தனியார் பஸ் உரிமையாளர்க ளின் வாழ்வாதாரம் தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் எடுத்துக் கூறப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பாகப் பரிசீலனை மேற்கொண்டு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரசபை இவை தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளவேண்டும்.

வடக்கு மாகாணத் தனியார் போக் குவரத்துச் சபைக்கு இடையிலான தொடர்பைச் சரியாகப் பேணுவ துடன் அவர்களுக்கு உரிய பதிலை விரைவாக வழங்கவேண்டும் எனவும் வடக்கு ஆளுநர் தெரிவித் தார். (ரி-26-66)



# யாழ். பல்கலைக்கழகத்தில் கனலி சஞ்சிகை வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் "கனலி" மாணவர் சஞ்சிகை 5ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வானது ஊடகக் கற்கைகள் துறையின் தலைவர் பூங்குழலி சிறீசங்கீர்த்தனன் தலைமையில் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட் போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்க லைக்கழகதுணைவேந்தர்பேராசிரியர்சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்க லைக்கழக கலைப்பீடப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகு ராம் , ஊடகக்கற்கைகள் துறை விரிவுரையாளர் அனுதர்ஷி கபிலன், ஊடகவியலாளர்கள், பல்க லைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பழைய மாண வர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-20)

# யாழ். பண்ணையில் சிரமதானப் பணி

யாழ்ப்பாணம், ஒக்.6

யாழ். பண்ணை சுற்றுவட்டப் பகுதிகளில் சிரமதான நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கி ழமை காலை மேற்கொள்ளப்பட்டன.

சுகாதாரத் தரப்பினர், பொலிஸ், இராணுவத்தின ரின் பங்களிப்புடன் நடைபெற்ற நடவடிக்கையில் பிளாஸ்ரிக் பொருட்கள் சேகரிக்கப்பட்டதுடன் விழிப் புணர்வு பதாகைகள் மற்றும் பிளாஸ்ரிக் சேகரிக் கும் கூடைகளும் வைக்கப்பட்டன.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ் மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், வடக்கு மாகாண சுகாதார அமைச் சின் செயலாளர் அருள்ராஜ் ,வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ்ப்பா ணம் பிரதேச செயலாளர் சுதர்சன், யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், இராணுவ பொலிஸ் உயர் அதிகாரி கள், கடற்படையினர், சுகாதார உத்தியோகத்தர் கள், யாழ். மாநகரசபை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-20)

சாவகச்சேரி மருத்துவமனைக்கு

# தாதியர்கள் நியமிக்கப்பட்டால் சத்திரசிகிச்சை அலகை இயக்கலாம்

சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்கு விசேட பயிற்சி பெற்ற தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டால் மருத்துவமனை அவசர சத்திரசிகிச்சை அலகை வாரத்தில் மூன்று தினங்கள் நடத்தமுடியுமென மருத் துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. மருத்துவம னையில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மாத்திரம் இந்த அலகு செயற்பட்டு வருகிறது. இந்த நாள்களில் இரு விடுதிகளில் கடமையாற்றும் தாதியர் அலுவலர் கள் சத்திரசிகிச்சைக் கூடத்துக்கு கடமைக்கு அழைக் கப்படுகின்றனர். பயிற்றப்பட்ட தாதியர் அலுவலர்கள் இருப்பின் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நோயாளர்களுக்கு சேவைகளை வழங்கமுடியும். மருத்துவமனையில் போதிய அளவு விடுதி வசதிகள் உள்ளதால் உரிய மருத்துவ நிபுணர் கள் தாதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டால் இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளர்கள் யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டுசெல்ல வேண்டிய தேவை ஏற்படாது என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (ச-9)




# சின்னம் சூட்டலும் சேவை பாராட்டும்

யாழ்ப்பாணம், ஒக்.6

பளை வேம்போடுகேணி சி.சி.த.க பாடசா லையின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டல் மற்றும் இடமாற்றம் பெற் றுச் சென்ற ஆசிரியர்களுக்கான சேவை நலன் பாராட்டுதல் நிகழ்வுகள் பாடசாலை மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடை பெற்றன. நிகழ்வில் விருந்தினர்களாக பழைய மாணவர் முருகன் மற்றும் அவரின் துணைவியார் நளினி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (25, 9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### வடக்கு ஆளுநருடனான
# மக்கள் சந்திப்பு இனி திங்களில்

கொழும்பு, ஒக். 6
வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் பொதுமக்கள் தினமாக திங்கட்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆளுநருடன்பொதுமக்கள்தங்களுடையபிரச்சினைகளை நேரடியாக அலுவலக நேரங்களில் கலந்துரையாடுவதற்காக பொதுமக்கள் தினமாக முன்பு புதன்கிழமை காணப்பட்டது.
தற்போது அதற்குப் பதிலாக திங்கட்கிழமை பொதுமக்கள் தினமாக மாற்றப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# சட்டவிரோத சுற்றுமதில் பாதுகாப்புக்கு வீதி மண்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.6
முல்லைத்தீவு, மாமூலை கிராமத்தில் தனிநபர் ஒருவர் தான் அமைத்த சுற்றுமதிலுக்குப் பாதுகாப்பாக மண் அணை அமைப்பதற்கு வீதியிலுள்ள மண்ணை எடுத்து பயன்படுத்தியதாக கிராம மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.
கரைதுறைப்பற்றுப் பிரதேச சபையின் முள்ளியவளை உப அலுவலகப்பிரிவிலுள்ள மாமூலை கிராமத்தில், பிரதேசசபையின் அனுமதி பெறாது சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட மதிலுக்கு சேதம் ஏற்படாத வகையில் கனரக இயந்திரத்தைப்பயன்படுத்தி கிராம அலுவலர் அலுவலகத்துக்குச் செல்லும் பிரதேசசபைக்குரிய வீதியில் காணப்பட்ட மண்ணை தனது மதிலுக்குப் பாதுகாப்பாக அள்ளிக் குவித்துள்ளார்.
இதனால் இந்த வீதியைபயன்படுத்தும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.
இதுதொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக பிரதேசசபைக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.
உரிய அதிகாரிகள் இந்தப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-25, 13)



# 200 மாணவர்களுக்கு பார்வைக் குறைபாடு

யாழ்ப்பாணம், ஒக். 6
சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால். பாடசாலைகளில் கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் நடத்தப்பட்ட கண் பரிசோதனையில் 200 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குப் பார்வை குறைபாடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன.
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியிலும், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் 60 க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு பார்வைக் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-25,9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** தொடங்கும் புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். ஆதாயம் கிடைக்கும். அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வகையில் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும். வீண் விவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது. சிவ வழிபாடு நன்மை தரும்.

**இடபம்:** எதிர்பார்த்த பணவரவு உண்டாகும். தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** தொட்ட காரியங்கள் துலங்கும் என்றாலும் உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிக ரிக்கும். மகாவிஷ்ணுவை வழிபடுவதன் மூலம் சிரமங்கள் குறையும்.

**கடகம்:** நீண்ட காலமாக இழுபறியாக இருந்த அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண் டாகும். மகிழ்ச்சியான சூழ்நிலை நிலவும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். பணவரவுக்கும் வாய்ப்புண்டு. திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்க வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களு டன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினை ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**துலாம்:** அவசரமில்லாமல் செயற்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும். செலவுகளால் கையிருப்பு கரையும்.

**விருச்சிகம் :** அனுகூலமான நாள். தேவையான பணவரவு உண்டாகும். எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆறுமுகப் பெருமானை வழிபாடு அதிர்ஷ்டம் தரும்.

**தனுசு:** சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. மகாலட்சுமி வழிபாடு நன்மைகளை அதிகரிக்கும்.

**மகரம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். ஆஞ்சநேயர் வழிபாடு நன்மைகளை அதிகரிக்கச் செய்யும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. செலவு செய்யவேண்டி இருக்கும். வீண் விவாதங்கள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. விநாயகரை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் அதிகரிக்கும். சக வியாபாரிகளால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

# கனடா ஹீற்றருக்குள் குஷ் போதைபொருள்!

கொழும்பு . ஒக். 6
வீடுகளுக்குப் பொருத்தும் ஹீற்றருக்குள் மறைத்து அனுப்பப்பட்ட குஷ் போதைப்பொருள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் பொதிகள் சேமிக்கும் பகுதியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.
கனடாவிலிருந்து உள்ளூர் முகவரியொன்றுக்கு அனுப்பப்பட்ட நான்கு ஹீற்றருக்குள் 1.883 கிராம் குஷ் போதைப்பொருள் மறைத்து அனுப்பப்பட்டுள்ளது.
ஒரு கிராம் குஷ்ஷின் பெறுமதி 6 ஆயிரம் ரூபாவிலிருந்து 7 ஆயிரம் ரூபா என போதைவஸ்து தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஒ-22-6)



கல்வனை பாரதி முன்பள்ளியின் சிறுவர் தினக் கொண்டாட்டம் முன்பள்ளி மண்டபத்தில் முன்பள்ளித் தலைவி. கு. சங்கீதா தலைமையில் முன்பள்ளி மண்டபத்தில். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெற்றது . இந்த நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர் பெற்றோர், பழைய மாணவர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-63)

# கழிவுக்கிடங்கில் தீ; மயங்கிய முதியவர்

யாழ்ப்பாணம், ஒக். 6
கல்லுண்டாயிலுள்ள கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் பகுதிக்குத் தீ வைத்ததனால் வீதியில் பயணித்த முதியவர் ஒருவர் நேற்றுமுன்தினம் மயக்கமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.
கல்லுண்டாயிலுள்ள, யாழ். மாநகரசபையினரின் கழிவுப் பொருள்கள் சேகரிக்கும் பகுதிக்கு நேற்று முன்தினம் காலை தீ வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் புகை வீதியெங்கும் பரவியது.
இதன்போது துவிச்சக்கரவண்டியில் அந்த வீதியால் பயணித்த 70 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவருக்கு மயக்கம் ஏற்பட்ட நிலையில் அவர் துவிச்சக்கர



வண்டியை நிறுத்திவிட்டு வீதியோரத்தில் அமர்ந்திருந்ததாகவும், வீதியால் சென்றவர்கள் அவருக்கு தண்ணீர் கொடுத்து மயக்க நிலையை போக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# இந்தியாவின் கனவு பலிக்குமா?

இந்திய வெளிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் ஒரு நாள் பயணமாக இலங்கை வந்து திரும்பியிருக்கின்றார். இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் மிலிந்த மொரகொடவின் பாத் பைண்டர் அமைப்பினரையும் அவர் சந்தித்திருக்கின்றார். இந்தப்பயணத்தின்போது தமிழ்க்கட்சிகளுடனான சந்திப்பு நடைபெறவில்லை. அதேபோன்று மலையகத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்புகளுடனும் சந்திப்புகள் இடம்பெறவில்லை.

ஆனால் இந்தச் சந்திப்பில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாட்டு மக்களால் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்ட தேர்தலில் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவர் சந்தித்ததன் ஊடாக இந்தியாவின் செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது. புதிய அரசாங்கத்தை இந்தியா மனதார ஏற்றுக்கொள்ளவில்லை என்பதே அந்தச் செய்தி.

தற்போதைய நாடாளுமன்றத் தேர்தலிலும் தனது ஆட்டத்தை இந்தியா ஆரம்பிக்கப் போகின்றது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருவருடனான சந்திப்பின்போதும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இரு தரப்பும் ஒன்றிணைந்து போட்டியிடுவதற்கான வலியுறுத்தலை, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் முன்னெடுத்திருக்கின்றார் என்று தெரியவருகின்றது. எப்படியாவது தமக்குவேண்டிய தரப்பை அல்லது தாம் சொல்வதைச் செய்யும் தரப்பை ஆட்சியில் அமர்த்துவதற்கு இந்தியா துடிக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தலிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் என்று கணிக்கப்படும் நிலையில், நாடாளுமன்றப் பலத்தையாவது தமது தரப்புகளை கைப்பற்றச் செய்து, தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியை குழப்புவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதை தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்துக்கு உணர்த்தும் வகையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் முன்னாள் ஜனாதிபதி ரணிலுடனும் சந்தித்திருக்கலாம்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவின் காய் நகர்த்தல்கள் தோல்வியில் முடிந்திருந்தன. சஜித்தையும், ரணிலையும் ஒன்றிணைப்பதற்கு தலைகீழாக நின்று அவர்கள் எடுத்த முயற்சி கைகூடவில்லை. இப்போதும் அதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யும் கணம் வரையில் அதற்கான நகர்வுகளை முன்னெடுக்க முடியும் என இந்தியா நம்புகின்றது. அதன் ஆகப்பிந்திய முயற்சியாகத்தான் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரே நேரில் சந்தித்து சஜித்துடனும், ரணிலுடனும் கலந்துரையாடியிருக்கின்றார். ஆனால் ரணில் தரப்பும், சஜித் தரப்பும் தத்தம் தனிப்பட்ட 'ஈகோ'வை நாடாளுமன்றத் தேர்தலிலும் முன்னிறுத்துவதால், அவ்விரு தரப்பும் இணைவதென்பது பெரும்பாலும் சாத்தியமற்ற விடயமே. அதனால் தேசிய மக்கள் சக்திக்கே லாபம் அதிகம். இருப்பினும் கடைசியில் ஏதேனும் திருப்பங்கள் நடந்து, சஜித்தும் ரணிலும் இணைந்தால், அதன் பின்னர் இந்தியா தான் நினைத்த ஆட்டமொன்றை இலங்கையில் தொடங்கும் சாத்தியங்களும் அதிகமே. இந்தியாவை தென்னிலங்கை அரசியல்வாதிகள் நம்பியிருந்த காலம்மாறி, இப்போது தென்னிலங்கை அரசியல்வாதிகளின் ஒற்றுமைக்காக இந்தியா காத்திருக்கும் காலம் இது. அது யார் பக்கம் கனியும் என்பதுதான் இன்னும் புரியாத புதிர்.




# குற்றவியல் வழக்குகளின் தாமதம் குறித்து ஆராய்வு

கொழும்பு, ஒக். 6

**குற்றவியல் மற்றும் ஊழல் தொடர்பான பொலிஸ் விசாரணைகள் இழுபடுவதற்குரிய காரணங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளன.**

பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலரும் முன்னாள் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபருமான ரவி செனிவிரத்ன நேற்றுமுன்தினம் பொலிஸ் தலைமையகத்தில் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போதே இந்த விசாரணைகள் இழுபடுவதற்கு அரசியல் அழுத்தங்கள் ஏதாவது காரணமா? அல்லது வேறு வெளிச்சக்திகளின் தலையீடு உள்ளதா? என்ற கோணத்தில் அவர் ஆராய்ந்தார். (ச-6)

## உத்தியோகபூர்வ கடமைக்கு பொலிஸார் உடன் திரும்புக

கொழும்பு, ஒக். 6

முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் அனைவரையும் தமது பழைய இடங்களில் கடமைக்கு சமுகமளிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய உத்தரவிட்டுள்ளார். ஆயிரத்து 200 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அமைச்சர்கள்,நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர் எனவும் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ச-6)

## வீதியோரத்தில் 30,000 சிறுவர்கள்

நாட்டில் 15 ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் வரையான சிறுவர்கள் வீதியோரங்களில் உள்ளதாக தொழில்சார் பொது மருத்துவ சங்கத் தலைவர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

இவர்கள் வழிபாட்டுத் தலங்களிலும், வர்த்தக மையங்களிலும் கூடுகின்றனர்.

போதைவஸ்து விற்பனையாளர்கள் இவர்களைப் பயன்படுத்துவதாகவும் இவர்களில் சிலர் பாலியல் தொழிலாளர்களாக மாறுகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## விவசாயிகளுக்கு உரமானியம்

கொழும்பு, ஒக். 6

நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கப்படும் என விவசாய அமைச்சின் செயலர் எம்.விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். ஒரு ஹெக்டயர் நிலப்பரப்பில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு 25 ஆயிரம் ரூபா உரமானியம் வழங்குமாறு ஜனாதிபதி அறிவித்திருந்தார். எனினும் தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் மானியங்களை அறிவிப்பது தேர்தல் விதிமீறல் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த நிலையில் உரமானியத்தை நிறுத்த வேண்டாமென ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-6)

## மத்திய வங்கியால் கட்டுப்பாடு விதிப்பு

கொழும்பு , ஒக். 6

வர்த்தக வங்கிகளுக்கு பல கட்டுப்பாடுகளை மத்திய வங்கி விதித்துள்ளது.

இயக்குநர்சபை அங்கத்தவர்களில் அரைவாசிப்பேர் சுயாதீன உறுப்பினர்களாக இருக்கவேண்டும். இயக்குநர் சபைத் தலைவர் சுயாதீன உறுப்பினராக இருக்கவேண்டும் என்பன மத்தியவங்கி விதித்துள்ள நிபந்தனைகளில் முக்கியமானவை.

அத்துடன் வங்கியால் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டுமெனவும் மத்தியவங்கி வர்த்தக வங்கிகளுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ச-6)

**நாளை**

07.10.2024

திங்கட்கிழமை - புரட்டாதி - 21

சுபநேரம் : 12.02- 01.32

ராகுகாலம் : 07.32 - 09.02

**நாளொரு நல்வார்த்தை**

நெருப்பு விறகைத் தின்பது போல கபடமும், பொறாமையும் நன்மைகளைத் தின்றுவிடும்.

- முகமது நபி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# சக்கர நாற்காலி வழங்கிவைப்பு!

முல்லைத்தீவு, ஒக். 6

மாற்றுத்திறனாளிகள் இருவருக்கு தலா பத்து இலட்சம் ரூபா பெறுமதியான இரு சக்கர நாற்காலிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள மக்கள் நலன் காப்பக அலுவலகத்தினால் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. காப்பகத்தின் இணைப்பாளர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் புலம்பெயர் தமிழர்களான அமரர் கைலாசப்பிள்ளை விஜயகுமாரன் நினைவாக ஐக்கிய இராச்சிய மக்கள் நலன் காப்பகத்தின் ஊடாக அவரது மனைவி நவமணியினால் ஒரு பயனாளிக்கும், அமரர் வேலுப்பிள்ளை சசிறூபன் நினைவாக அவரின் சகோதரர்களால் மற்றும் ஒரு பயனாளிக்கும் நவீன மின்சார சக்கர நாற்காலிகள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ஒ-25-19)

# பொதுத்தேர்தலில் களமிறங்கும் புதிய மாக்சிச லெனினிசக் கட்சி

யாழ்ப்பாணம். ஒக். 6

**எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி பங்கு கொள்ளும் எனக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளதாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உறுதியான கொள்கையும் மக்கள் சார்பு நடைமுறைச் செயற்பாடும் கொண்ட மக்கள் போராட்ட முன்னணி யின் குடைச் சின்னத்தில் போட்டியிட கட்சியின் மத்திய குழு முடிவு செய்துள்ளது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வன்னி, மாத்தளை, நுவரெலியா, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் போட்டியிடுவதற்கு கட்சி வேட்பாளர்களை நிறுத்தவும் முதன்மை வேட்பாளர்கள் பொறுப்பினையும் ஏற்று கட்சி இப் பொதுத்தேர்தலில் களமிறங்குகிறது.

ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் மக்களினதும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களினதும் நீதியானதும் நியாயமானதுமான கோரிக்கைகள் முன்வைக்கப்படவும் வென்றெடுக்கப்படவும் வேண்டியுள்ளது.

எனவேதான் தேர்தலில் பங்குபற்றி நாட்டுக்கும் மக்களுக்கும் தேசிய இனங்களுக்கும் எமது கொள்கைகளை முன்வைத்து பிரச்சினைகளைத் தெளிவுறுத்தி வாக்குகள் பெற்று நாடாளுமன்றம் சென்று மக்களின் குரலாக நேர்மையுடன் செயற்பட முன்வந்துள்ளோம் என்றுள்ளது. (ஒ-25)

## வன்னியில் களமிறங்கும் சீலரத்தின தேரர்

யாழ்ப்பாணம், ஒக். 6

வன்னி மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான முதலாவது வேட்பு மனுவை பத்தரமுல்லே சீலரத்தினதேரர் தாக்கல் செய்துள்ளார்.

வன்னித்தேர்தல் தொகுதியில் போட்டியிடுவதற்காக ஜனசெத பெரமுன தனது வேட்புமனுவை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தாக்கல்செய்துள்ளது.

வவுனியாமாவட்டச்செயலகத்தில்அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. (ஒ-110)



# தட்சணாமருதமடு ம.வி மாணவிகள் சாதனை

மன்னார், ஒக். 6

இரத்தினபுரியில் நடைபெற்ற தேசிய மட்ட தைக்கொண்டா போட்டியில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கலந்துகொண்ட மன்னார் தட்சணாமருதமடு ம.வி மாணவிகள் தேசிய ரீதியில் சாதனை படைத்துள்ளார்கள்.

20 வயதுப் பிரிவு 52-55 எடைப் போட்டியில் யோ.சுடர்மதி 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், 20 வயதுப் பிரிவு 49-53 கிலோ எடைக்குட்பட்ட போட்டியில் நா.விதுஷா மற்றும் 46-49 எடைக்குட்பட்ட போட்டியில் ப.தர்சிகா இருவரும் மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுள்ளனர். (ஒ-25-213)



## வீதி விளக்குகள் பொருத்தும் பணி!

யாழ்ப்பாணம்,ஒக். 6

வலிகாமம் மேற்கு பிரதேசசபையினரால் வீதி விளக்குகள் பொருத்தும் பணிகள் ரஜீவனின் மேற்பார்வையில் சங்கானை நகரப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன. (ஒ-றி-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SLIIT Northern Uni ஆனது வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த தனது முதலாவது செய்மதியை இந்தியா - இலங்கை பங்காண்மையுடன் விண்ணில் செலுத்தவுள்ளது




விண்வெளி ஆய்வு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை குறிக்கும் வகையில், SLIIT Northern Uni. ஒரு செய்மதியை விரைவில் கோளச்சுற்றுப்பாதையில் செலுத்துவதற்கான தனது முதலாவது விண்வெளி திட்டத்தை அறிமுகப்படுத்தி, அறிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றது. அறிவியல் கூட்டாண்மை மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை வளர்ப்பதற்கான பாலமாக செயற்படும் இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையிலான உறவை மேம்படுத்தும் வகையில் இத்திட்டம் அமையவுள்ளது. இம் முயற்சி தேசிய எல்லைகளைக் கடந்து, விண்வெளி அறிவியலை மேம்படுத்துவதற்கும், யாழ்ப்பாண பிராந்தியம் உட்பட இலங்கை முழுவதிலும் உள்ள மாணவர்களுக்கு அதிநவீன விண்வெளி தொழில்நுட்பத்திற்கான வெளிப்பாட்டைப் பெறுவதற்கும் சம வாய்ப்புக்களை வழங்குவதற்குமான இலட்சியத்தை பிரதிபலிக்கின்றது.

**யாழ்ப்பாணத்திற்கும் இலங்கைக்கும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை:**

இச் செய்மதி திட்டத்தின் ஊடாக முதன்முறையாக, இலங்கையின் வட பிராந்தியத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், அரச பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் விண்வெளி தொழில்நுட்பத்திற்கான நேரடி வெளிப்பாட்டைப் பெறுகின்றார்கள்.

SLIIT Northern Uni யின் செய்மதி செயற்றிட்டமானது கல்வியில் ஒரு திருப்புமுனையை பிரதிநிதித்துவப்படுத்துவது மட்டுமன்றி, தொழில்நுட்ப அணுகலில் உள்ள இடைவெளியை நிரப்ப உதவுவதன் மூலம் வெவ்வேறு கல்வித்துறையை சேர்ந்த மாணவர்களுக்கும் ஏராளமான வாய்ப்புகளைக் கொண்டு வருகின்றது. செய்மதியை விண்வெளிக்கு அனுப்பும் முயற்சியின் மூலம் கல்வி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்களிலிருந்து இலங்கை முழுவதிலுமுள்ள அனைத்து தரப்பு மாணவர்களும் நன்மையடைவார்கள் என்பதை உறுதி செய்யும் நோக்கோடு திரு.இந்திரகுமார் பத்மநாதன் அவர்களால் (SLIIT Northern Uni - தலைவர்) இம் முயற்சியானது முன்னெடுக்கப் பட்டுள்ளது.




இந்த இலட்சிய பணிக்கு ஆதரவளிக்கும் வகையில் SLIIT Northern Uni ஆனது, விண்வெளித்துறையில் இந்தியாவின் முன்னணி நிறுவனமான Space Kidz உடன் கைகோர்த்துள்ளது. Space Kidz இந்தியா என்பது விண்வெளியில் பெண்களுக்காக வாதிடுவதைத் தவிர, உலகெங்கிலும் உள்ள இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் ஒரு விண்வெளி புத்தாக்க நிறுவனம் ஆகும். செய்மதி உருவாக்குதலில் அவர்களின் விரிவான அனுபவம் SLIIT Northern Uni யின் இச்செயற்றிட்டத்தின் வெற்றிக்கு முக்கிய கருவியாக அமையவுள்ளது. கலாநிதி ஶ்ரீமதி கேசன் அவர்கள் SLIIT Northern Uni யின் இச்செயற்றிட்டத்திற்கு இயக்குனராக தலைமை தாங்கவுள்ளார். இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்படுவதால், அடுத்த தலைமுறை விண்வெளி ஆர்வலர்களை ஊக்குவிப்பதற்கும் கற்பிப்பதற்கும் பகிரப்பட்ட நிபுணத்துவத்தின் முக்கியத்துவத்தை இவ் ஒத்துழைப்பு வழங்குகின்றது.

SLIIT Northern Uni ஆனது சர்வதேச ஒத்துழைப்பை அடையாளப்படுத்தும் வகையில் உலக விண்வெளி வாரத்தின் போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றது. உலக விண்வெளி வார அமைப்பின் நிர்வாக இயக்குனர் Ms. Alma Okpalefe, இச் செயற்றிட்டத்தினை ஆதரிப்பதற்கும் இவ் உலகளாவிய விண்வெளி முயற்சியின் முக்கியத்துவத்தைக் கொண்டாடுவதற்கும் எங்களுடன் இணையக் காணொளியின் ஊடாக இணைந்து கொண்டதையிட்டு நாங்கள் பெருமை கொள்கின்றோம்.

**கல்வி மற்றும் ஆராய்ச்சி நோக்கங்கள்:**

இச்செய்மதியானது அதிநவீன கருவிகளை உள்ளடக்கி விண்வெளி வளிமண்டலத்தை ஆய்வு செய்யவும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை நிரூபிக்கவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் விஞ்ஞான நோக்கங்களுக்கு மேலதிகமாக, இத்திட்டம் கல்வி மற்றும் ஆராய்ச்சி இலக்குகளை உள்ளடக்கிய ஒரு பரந்த பணிக்கு உதவுகின்றது, அவையாவன:

- **கல்வி அனுபவம் :** செய்மதி தொழில்நுட்பம் , விண்வெளி பயணங்கள் மற்றும் அதிநவீன ஆராய்ச்சி ஆகியவற்றில் மாணவர்களுக்கு முதல் வெளிப்பாட்டை வழங்குதல்.
- **திறன் மேம்பாடு :** செய்மதி மேம் பாடு, தரவு பகுப்பாய்வு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்கள், STEM (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம்) இல் மாணவர்களை எதிர்கால வாழ்க்கைக்கு தயார்படுத்துதல் போன்ற திறன் வளர்ப்புக்கான வாய்ப்புக்களை வழங்குதல்
- **ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு :** அற்புதமான ஆராய்ச்சியில் ஈடுபடவும், சமூகத்திற்கு பயனளிக்கக் கூடிய புதுமையான தொழில்நுட்ப தீர்வுகளுக்கு பங்களிக்கவும் மாணவர்களை ஊக்குவித்தல்.

**கூட்டு முயற்சி**

SLIIT Northern Uni ஆனது இலங்கை கல்வி அமைச்சுடன் கைகோர்த்து பரீட்சைகளை நடாத்தி திறமை அடிப்படையில் மாணவர்களைத் தெரிவு செய்யவுள்ளது. பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயற்படும் இத்திட்டத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் ஆதரவு வழங்கியுள்ளது. அரச - தனியார் கூட்டாண்மையின் ஊடாக இலங்கையின் முதலாவது செய்மதியை விண்ணில் செலுத்துவதே இம் முயற்சியின் நோக்கமாகும் .

**கட்டம் 1 -** இலங்கை மற் றும் இந்தியாவில் மாணவர்களைப் பயிற்றுவித்தல் - விண்வெளி விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப கண்ணோட்டம்

இலங்கையில் இருந்து 50 பாடசாலை மாணவர்களும், 50 பல்கலைக்கழக மாணவர்களும் இந்தியாவிலிருந்து 10 பாடசாலை மாணவர்களும் தெரிவுசெய்யப்படவுள்ளார்கள்.

**கட்டம் 2 -**

- 30 பல்கலைக்கழக மாணவர்கள் செய்மதி உருவாக்கம் மற்றும் ஒருங்கிணைப்பின் ஒரு பகுதியாக இருப்பார்கள்.
- இலங்கையைச் சேர்ந்த 15 பல்கலைக்கழக மாணவர்களும் 50 உயர்நிலைப் பாடசாலை மாணவர்களும் இந்தியாவில் SLIIT Northern Uni யின் செய்மதி விண்ணில் செலுத்தும் நிகழ்வில் பங்குபற்றுவதற்கு விஜயம் செய்வார்கள்.




பல்வேறு கல்வி செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் செய்மதி திட்டம் STEM கல்வியை மேம்படுத்துவதையும் எதிர்கால சந்ததியினரை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. SLIIT Northern Uni யின் செய்மதி செயற்றிட்டமானது கைத்தொழில்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் கூட்டிணைப்பை உருவாக்கும் ஆற்றலையும் நன்மையையும் கொண்டுள்ளது.

**வருங்கால சந்ததியினரை ஊக்குவித்தல்**

இச் செய்மதி விண்வெளியில் செலுத்துதல் ஒரு தொழில்நுட்ப சாதனை மட்டுமல்லாது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் பங்களிக்க வேண்டும் என கனவு காணும் எண்ணற்ற மாணவர்களுக்கு இது நம்பிக்கை மற்றும் உத்வேகத்தின் அடையாளமாகும். SLIIT Northern Uni யின் இந்த முயற்சியானது, இலங்கையை கடந்து விண்வெளி ஆய் வின் எதிர்காலத்தை வடிவமைக்கும் இளைஞர்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் பிரச்சினைகளைத் தீர்ப்பவர்கள் மற்றும் புத்தாக்கங்களை உருவாக்கும் ஒரு தலைமுறையை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**SLIIT Northern Uni**

SLIIT Northern Uni ஆனது STEM பாடங்களில் விசேடமாக கவனம் செலுத்தி வருவதுடன் உலகத்தரம் வாய்ந்த கல்வியை மாணவர்களுக்கு வழங்குவதற்கும் புத்தாக்க உருவாக்கங்களை மாணவர்கள் மத்தியில் வளர்ப்பதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது. SLIIT Northern Uni அனைத்து மாணவர்களுக்கும் சமமான வாய்ப்புகளை வழங்குகின்றது. மேலும், அதன் செய்மதி திட்டம் இலங்கையில் விண்வெளி தொழில்நுட்பத்திற்கான அணுகலை விரிவுபடுத்துவதில் ஒரு முக்கியமான படியாகும்.

திரு. இந்திரகுமார் பத்மநாதன் அவர்களின் நீண்ட கால கனவுகளில் ஒன்றாகிய SLIIT Northern Uni ஆனது 2022ம் ஆண்டில் நிறுவப்பட்டது. இலங்கையின் பின்தங்கிய மாகாணங்களான வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள மாணவர்களுக்கு உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பம் மற்றும் வணிகத்துறை கல்விகளை வழங்கும் முகமாக SLIIT Northern Uni உருவாக்கப்பட்டது. கூட்டுறவு விதிமுறைகள், வேலை வாய்ப்புகளிற் கான சிறந்த தொழில்நுட்பம் மற்றும் வணிக கற்கைநெறிகளுடன், SLIIT Northern Uni மாணவர்களின் எதிர்காலத்திற்கான திறன்களை உருவாக்குவதை உறுதி செய்கிறது.

SLIIT Northern Uni ஆனது உள்நாட்டு மாணவர்களுக்கு மட்டுமல்லாது சர்வதேச மாணவர்களுக்கும் வெவ்வேறு துறைகளில் பட்டப்படிப்புக்களை வழங்கி வருகின்றது. யாழ்ப்பாணத்தில் உலகத்தரம் வாய்ந்த கல்வி மற்றும் வாய்ப்புகளுக்கான கதவுகளைத் திறப்பதன் மூலம் இந்நிறுவனம் வடக்கு - கிழக்கு பகுதிக்கு மிகுந்த முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. திறமையான மாணவர்களை நாட்டினுள் தக்கவைத்துக் கொள்வதன் மூலம் SLIIT Northern Uni அந்நியச் செலாவணியை சேமிப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குகின்றது. புத்தாக்கங்களை இயக்கி இலங்கைக்கு வருவாயைக் கொண்டுவரும் உயர் திறமையான நிபுணர்களை உருவாக்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

SLIIT Northern Uni ஆனது 300 ற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் தனது இரண்டாம் வருட செயற்பாட்டினுள் அடியெடுத்து வைக்கின்றது. SLIIT Northern Uni, தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிகத் துறைகளில் கற்கை நெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்காக உலகளாவிய பல்கலைக்கழகங்கள் பலவற்றுடன் தீவிரமாக கைகோர்த்து வருகின்றது. இதன் மூலம் கணிசமாக குறைந்த செலவில் Curtin பல்கலைக்கழகம் (ஆஸ்திரேலியா) மற்றும் Bedfordshire பல்கலைக்கழகம் (இங்கிலாந்து) போன்ற முதன்மையான வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான அணுகலைப் பெறுவதற்கான இலகுவான பாதையை இலங்கை, இந்தியா, நேபாளம் மற்றும் பங்களாதேஷில் உள்ள மாணவர்களுக்கு வழங்குகின்றது.

**Space Kidz இந்தியா**

Space முனைண இந்தியா என்பது ஒரு இந்திய விண்வெளி புத்தாக்க முன்னோடி ஆகும். இது சிறிய செயற்கைக்கோள்கள், விண்கலங்கள் மற்றும் தரை அமைப்புகளின் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் விண்வெளிக்கு செலுத்துதல் ஆகியவற்றில் முன்னோடியாக உள்ளது. கல்வி, ஆராய்ச்சி மற்றும் தொழில்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பொருளாதார மற்றும் நிலையான அணுகலை விண்வெளிக்கு வழங்குவதே இதன் குறிக்கோள் ஆகும். Space Kidz ஆனது 7வருடத்திற்கும் மேற் பட்ட அனுபவத்துடன், 19 ற்கும் மேற்பட்ட NSLVs (BalloonSats), 3 Suborbital Payloads மற்றும் 5 சுற்றுப்பாதை செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியுள்ளது.

மேலும் Space Kidz ஆனது "NASA", "ESA" மற்றும் "GCTC ரஷ்யா" போன்ற விண்வெளி முகாம்களின் தூதர்கள் ஆகும். இந்தியாவிலும் உலகெங்கிலும் விண்வெளி அறிவியலின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் Space Kidz இந்தியா முக்கிய பங்கு வகிக்கின்றது.

Website: https://northernuni.lk/satellitelab

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது ஆண்டுகளாய் ஈர விழிகளுடன்...



தோற்றம் 17 . 04 . 1953

மறைவு 18 . 09 . 2004

## அமரர் திலகவதி குமரவேல்

(முன்னாள் பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம்-சுன்னாகம்)

திதி:சதுர்த்தி (06.10.2024)

அன்புள்ள அம்மாவின் ஆயிரம் நினைவுகளில்
இருபது ஆண்டுகளாய் ஈர விழிகளுடன்...
எம் உயிர் உள்ளவரை
உறையாது உங்கள் நினைவுகள்....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"திருவேரகம்"
முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.

## வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாண நிறுவனத்திற்கு (CIDA Grade C4) களஞ்சியப் பொறுப்பாளர் வேலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுயவிபரக் கோவையை 07 நாட்களுக்குள் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தகைமைகள்: 1 க.பொ.த (உயர்தரம்)
2. வயதெல்லை:-35 வயதிற்கு உட்பட்டவர்கள்
3. சாரதி அனுமதிப்பத்திரம்
4. கட்டட பொருட்கள் சம்பந்தமான அறிவுடன்
5. ஆங்கிலம் / கணினி மற்றும் சிங்களம் அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(CS 1539) A-1

Email :- vacancynsc@gmail.com
WhatsApp :- 0777 1209 45

## விசா ஆலோசனை சேவை

NK விசா (PVT)

இத்தாலி 3 வாரம் UK 3 வாரம் நியுஸிலாந்து 3 வாரம் Student. விசிட் பயணமாகலாம் மற்றும் சகல நாடுகளுக்குமான விசிட், வேர்க், Family விசாக்களுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

கதிரேசு வீதி வவுனியா | திருநெல்வேலி யாழ்ப்பாணம் | வெள்ளவத்தை கொழும்பு

தொடர்பு: 077 604 0373

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

கடந்த 05.09.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர்

அமரர் முருகேசு தனபாலன்

அவர்களின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி
யாழ்ப்பாணம்

## காணி விற்பனைக்குண்டு

கொழும்புத்துறை, வட்டாரம் 8 ல் கடற்கரை வீதியிலிருந்து 50 மீற்றர் தூரத்தில் நில பரப்பு 1 குளி 9 உறுதிக்காணி விற்பனைக்குண்டு.

(சுற்றிவர வேலி கேற் போடப்பட்டுள்ளது)

தொடர்புகளுக்கு:
077 602 1799, 077 006 7542

## லொத்தர் ரிக்கட் விற்பனையாளர்கள் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர் ரிக்கட் விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை. கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, கல்வியங்காடு, தெல்லிப்பளை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு மட்டும் தொடர்புகொள்ளவும்.

076 185 2241, 077 516 4928


## சுதந்திரம்

இந்தியாவின் தொடர்ச்சியான வலியுறுத்தல்கள் காரணமாக, சாகோஸ் தீவுகள் மீதான இறையாண்மையை மொரிசியஸ் நாட்டுக்கு வழங்க பிரிட்டன் தீர்மானித்துள்ளது. (ம)

## பரீட்சை

நவராத்திரி விரதத்தை முன்னிட்டு இணுவில் சிவகாமி அறநெறிப் பாடசாலை நடாத்தும் தரம் 3 தொடக்கம் தரம் 9 வரையான பாடசாலை மாணவர்களுக்கான சைவசமய அறிவுப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் இணுவில் மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது. (ம-66)

# மரண அறிவித்தல்



பிறப்பு 16.11.1949

இறப்பு 05.10.2024

## ஆறுமுகம் யோகானந்தம்

திக்கம், அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் யோகானந்தம் அவர்கள் நேற்று (05.10.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கற்பகம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்வமணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளை மற்றும் பவளம், மகேஸ்வரி, சிவபாதசுந்தரம், கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குகானந்தன் (இங்கிலாந்து), ரமேஷ் (இங்கிலாந்து), அரவிந்தன் (இங்கிலாந்து), சுரேஸ் (அமரர்), கார்த்திகா (இங்கிலாந்து), யசோதா, கேதீசன், பரந்தாமன் (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவிகா, சிவதர்சினி, மஸ்கலேகா, குருபரன், சதாகரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலிகிழக்கு பிரதேச சபை) ஆகியோரின் அன்பு மாமனும், மதுஷ்கா, சஞ்ஜெய், பிரணவன், அனுஷ்கா, கிருத்திக், அர்ஜுனா, மமதி, ஆதிரன், பிரணவி, கபிஷா, அஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2024) திங்கட்கிழமை திக்கத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
070 695 5536
077 995 5536

"ஜதாலம்புலம்"
திக்கம், அல்வாய் மேற்கு.

(CS/1536) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பளை இயக்கச்சி மகா வித்தியாலயத்தில் சிறுவர் மற்றும் முதியோர் தின விழா அதிபர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.
(ரி-9)



நெடுந்தீவு பிரதேச சமூக பாதுகாப்புச்சபையின் 'ஆரஸ்ஸாவ' மேலதிக பிரதிபலன் திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கான காசோலைகள் பிரதேசசெயலர் திருமதி நிவேதிகா கேதீசனால் கடந்த புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.
(ச-25,9)

## செனி.பற்றிக்ஸ் கல்லூரி க.பொ.த.சா/த பெறுபேறு

யாழ்ப்பாணம், ஒக்.6

எஸ்.டினுசன் 9ஏ, ரி.கவின் 9ஏ, எஸ்.ஜாக்சன் 9ஏ, எஸ்.அபினாஸ் 9ஏ, பி.ஸ்மைக்கல் ஜெனுசன் 9ஏ, என்.கெமோர்ஸ் 9ஏ, என். பிரியன்ந் 9ஏ, மேரிஜன் 9ஏ, ஆர்.பிரிவீனாஸ் 9ஏ, ரி.தமிழ்கீரன் 8ஏபி, எம்.ஸ்டீவ் ரோஜர் 8ஏபி, ஏ.அருள்வளன் 8ஏபி, எஸ். கவின்சன் 8ஏபி, ஏ.அன்ரன் செரோன் 8ஏ சி, ஆர்.பீட்டர்சன் 8ஏ எஸ், ஆர்.ஜதுசாந் 7ஏ 2பி, ஜெ.கதிர் 7ஏபிசி, கே.அமலதாஸ் 7ஏபிசி, ஜெ.ஜிலோயன் 7ஏபிசி, எஸ்.தனுஸ்டன் 7ஏபிசி, ஏ.அன்பமுதன் 7ஏ2எஸ், ஆர்.டில்சாந் 6ஏ 3பி, எம்.பானுசன் 6ஏ 2பி சி, ஜெ.கர்வின்போல் 6ஏ 2பி சி, எச்.பிரவீன்ந் 6ஏ 2பி சி, வி.சஜோன் 6ஏபி 2சி, கே.கௌதம் 6ஏ பி சி எஸ், வி.அன்பரன் 6ஏ 2சி எஸ், ஜெ.பவநீதன் 5ஏ 4பி, டி.கரிஜ்மன் 5ஏ 4பி, ரி.தீபக் 5ஏ 3பி சி, ஆர்.சி.கிரிசான் 5ஏ 3பி சி, எஸ்.கஜனன் 5ஏ 3பி எஸ், ரி.அன்புத்தமிழ் 5ஏ 2பிஷ2சி, எ.டேவிட் 5ஏ பி 3சி,பி.உஷாந்தன் 5ஏ பி 3சி,எம்.யதுசன் 5ஏ பி 3சி.
(ச-25)




## சிறுவர் தின நிகழ்வு!

முல்லைத்தீவு, ஒக்.6

முல்லைத்தீவு கோவில்குடியிருப்பு பகுதியில் இயங்கிவரும் கார்மேல் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சிறுவர் தின நிகழ்வு முல்லைத்தீவு சுற்றுலா கடற்கரையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் சிறுவர்களுக்கான பாதுகாப்பு விழிப்பு ணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. அத்துடன் சிறுவர்களுக்கான பரிசில்களும் மரக்கன்றுகளும் வழங்கிவைக்கப்பட்டன .
(ச-25,19)


### உடனடி வேலைவாய்ப்பு

பிரபல்யமான கம்பனி வடமாகாணத்தில் முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்கள் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆண்/ பெண் தேவை

தொடர்பு: 076 112 4145

### விற்பனைக்குண்டு

பப்பா காய்கள் (பப்பாளி காய்கள்), விற்பனைக்கு உண்டு. 2x2 மாபிள்கள், வெவ்வேறு நிறங்களில் விற்பனைக்கு உண்டு.

ஒன்றின் விலை - 250 ரூபாய்

தொடர்பு: 077 993 8348

### வீட்டுப் பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வீடொன்றிற்கு வீட்டுச் சமையலுக்கு உதவிசெய்தல், வீட்டு வேலைகள் மற்றும் ஆண் முதியவர் ஒருவரைப் பராமரிக்க பணியாளர் உடன் தேவை.

தொடர்பு: 078 7311 1049


## துயர் பகிர்கிறோம்

எமது கல்லூரி ஆசிரியர் சி.சத்தியசிவம் அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் செல்லத்துரை சிவசுந்தரம்**



அவர்கள் அமரத்துவம் அடைந்தமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

துயருடன்...
ஆசிரியர் நட்புறவுக்கழகம்,
யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி

## விசேட பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், அளவெட்டி மத்தி, அழகொல்லை விநாயகர் ஆலயத்தின் தர்மபரிபாலன சபையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 20.10.2024 (ஞாயிறு) மு.ப. 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ளமையினால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அழகொல்லை விநாயகர் ஆலயம்
அளவெட்டி மத்தி,
யாழ்ப்பாணம்.

இறைபணியில்
வி. கஜன்
செயலாளர்


## University of Professional Studies R.A.De Mel Mawatha Colombo 03.

**Department of Law:**

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தினால் சட்டத்துறை சார்ந்த பின்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறிகள்:

**Course 1: Diploma Courses**
**Course 2: Degree of Bachelor of Laws**

இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகத்தினால் Diploma in Law , LL.B. Programme கற்கைகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆறு மாத காலங்களினை கொண்டதாக Course 1 கற்கை நெறியும், மூன்று வருட காலங்களினை கொண்டதாக (விசேடம் : 4 வருடங்கள்) Course 2 கற்கை நெறியும் காணப்படுகின்றது.

நன்மைகள்:

* க.பொ.த (சா/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள் கற்கைநெறியில் இணைந்துகொள்ள முடியும்.
* க.பொ.த (உ/த) பெறுபேறுகள் பெற்ற மாணவர்கள், உத்தியோகத்தர்கள் LL.B.கற்கைகளில் இணைந்து கொள்ள முடியும்.
* சட்டக் கல்லூரியின் Attorney- at-Law பதிவு, கற்கைகளினை பூரணப்படுத்த முடியும். ஆங்கில மொழி ஊடாக கற்றல், பரீட்சைகள்.
* விரிவுரைகள் சட்டத்தரணிகளினால் நேரடி, Zoom ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.
* இலகு தவணை கட்டண வசதி.
* பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அங்கீகாரமுடையது.

விண்ணப்பிக்கும் முறை:

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினை மின்னஞ்சல் ஊடாக 12.10.2024ற்கு முன்பாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு:
இணைப்பாளர்,
இலங்கை தொழில்சார் பல்கலைக்கழகம்,
கொழும்பு 03.
T.P:074 2349120 / 076 6852529
E-mail: degreeinfo21@gmail.com
Colombo/Batticalo/Trinco/Kandy/Vavuniya/Jaffna/Killinochchi/Mullitivu/Mannar


## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலய ஆசிரியர்

### கிருஷ்ணபிள்ளை சிவானந்தன் (BA, PGDE)

(ஆசிரியர் சேவைச் சங்க தென்மராட்சி வலய செயலாளரும், தேசிய மக்கள் சக்தி (N.P.P) தென்மராட்சி அமைப்பாளரும்)

கல்வியின் பண்புத்தர விருத்திக்காக அளப்பரிய பங்காற்றியமைக்காக கொழும்பு கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் 04.10.2024 அன்று " குரு பிரதீபா பிரபா விருது " பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்:
நிஷாம், பிறீடன், ஜெனிஸ் றோக்
(மச்சான்மார்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY COLLEGE OF JAFFNA

**UNIVERSITY COLLEGE OF JAFFNA**
**University of Vocational Technology**
**Ministry of Education**

Applications are open for the following Diploma / Higher National Diploma courses

1. Building Services Technology
2. Construction Technology
3. Cosmetology
4. Farm Machinery Technology
5. Food Technology
6. Hospitality Management
7. Information and Communication Technology
8. Mechatronics Technology
9. Production Technology

Closing Date 6th November 2024

Accreditation QMS TVEC Approved Registration

**Entry Qualifications: GCE A/L Qualified or NVQ 4**

Career Path: A/L or NVQ 4 → University College: NVQ 5 / Diploma → NVQ 6 / HND → NVQ 7 / Degree

For more details please visit:
* Website : www.ucj.ac.lk
* Telephone : 021-221-7791 or 021-221-7792
* Fill the google form and attach the required documents
* Please pay the Application fee Rs.1000 to the Account No. (Peoples Bank 162-100100045947) and upload the scanned copy of the bank receipt with the online application

(cs 43353)

Accepting online applications only

**இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை**

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்யமுடியும்.
பதிவுக் கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts&Cs apply
Www.inaipa.com

(CS/56378) J-1

## சீனர்கள் வெளியேற்றம்

இஸ்ரேலுக்கும் ஹிஸ்புல்லாவுக்கும் இடையிலான மோதல்கள் இடம்பெற்று வரும் லெபனானிலிருந்து 200க்கும் மேற்பட்ட சீனக் குடிமக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

(ம)

## விற்பனைப் பிரதிநிதி தேவை

DURO PVC Pipes • Water • Dependability Since 1981

**பிரபல PVC உற்பத்தி நிறுவனம் ஒன்றின் யாழ் கிளைக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.**



- 40 வயதிற்குக் குறைந்த வராக இருத்தல் வேண்டும்.
- PVC துறையில் இரண்டு ஆண்டுகள் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- க.பொ.த உயர்தரம், சாதாரண தரம் சித்தியடைந் தோர்.
- யாழ் நகரிற்கு அண்மையில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
- சம்பளம், மேலதிக கொடுப்பனவுகள் - 100000/-

தொடர்புகளுக்கு:- Email :- info@duro.lk

011 225 3861
070 389 6878
077 789 6878

## UK Immigration Consultancy

## Student Visa

Undergraduate and Post - Graduate Degrees
(No IELTS needed if you have O/L Credit Pass for English)
Places available for January intake

## Skilled Worker Visa

Only the visa application

## UK Visa Refusals

All types of UK visa refusals (Visit visa, Student visa, Skilled worker visa, spouse visa)
We will introduce you to experienced lawyers based in UK to handle your.
- Admin Review
- Tribunal Appeal
- Judicial Review

(CS/56360) J-1

Please Contact: 077 019 1110

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 01 . 1953



மறைவு 02 . 10 . 2024

## நல்லையா தனலட்சுமி

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா தனலட்சுமி கடந்த 02.10.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - தங்கராசம் தம்பதியரின் அன்பு மகளும், மார்கண்டு - நாகமணி தம்பதியரின் அன்பு மருமகளும், நல்லையாவின் (செல்வராசா) அன்பு மனைவியும், வடிவாம்பிகை, காலஞ்சென்ற பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம், நவரத்தினம், நாகையா, யோகநாதன் மற்றும் செல்வராணி, செங்கமலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், வனிதாவின் சிறிய தாயாரும், ரவிச்சந்திரனின் மாமியாரும், ரிஷி, காரணி, அபூர்வா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஸ்ரீ சோதிவாசம்
பாப்பாத்தோட்ட வீதி,
இணுவில் மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்

(CS56382) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## முருகேசு சிவபாலன்

(முன்னாள் ஓய்வுபெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்)

தோற்றம் 09.09.1950 — மறைவு 03.10.2024

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவபாலன் அவர்கள் கடந்த (03.10.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கனகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - தங்கம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், இராஜராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், சுகாஜினி (பலநோக்கு கூட்டுறவு சங்கம், சாவகச்சேரி), சிவகரன் (சாவகச்சேரி), தயாழினி (வவுனியா), வசீகரன் (பொலிஸ் உத்தியோகத்தர், பூநகரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், முரளிதரன் (ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பர்த்தீஸன் (Engineer - ZTE Mobital SLT), கார்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தேவபாலன் (ஜேர்மனி), தனபாலன் (முன்னாள் கணித ஆசிரியர், சென்.பற்றிக்ஸ், யாழ்ப்பாணம், ஓய்வுநிலை உத்தியோகத்தர் சுகாதார திணைக்களம் - கிளிநொச்சி), மற்றும் குணபாலன் (UK), சந்திரபாலன் (சுவிஸ்), ஜீவச்சந்திரமணி (யாழ்ப்பாணம்), சுந்தரபாலன் (UK), காலஞ்சென்ற கிருஸ்ணபாலன் (யாழ்ப்பாணம்), மற்றும் நந்தபாலன் (நோர்வே), விஜயபாலன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராஜகுலதேவி, காலஞ்சென்ற கோசலா, மற்றும் கௌரி, ராஜேஸ்வரி, ஞானதேசிகன் (ஓய்வுநிலை பிரதி அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி), கமலவதனி, பிரசாந்தினி, ஜெயந்தி, காலஞ்சென்ற நாகராஜா (மட்டுவில்), மற்றும் கைலைநாதன் (வவுனியா), சாரதாம்பாள் (கொழும்பு), ஸ்ரீதேவி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும், பானுஜன், அஷ்விஜன், பிரமோத்ஜன், லிதீஷா, கேஷிகா, சபீஸ்ஜன், வருணிஷா, டனுக்ஷ்ஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (06.10.2024) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.137, சிவநிதி,
நுணாவில் கல்வயல் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல் : குடும்பத்தினர்
+9476 886 2254
+9477 990 7071



## சிறுவர் தின நிகழ்வுகள்

சாவகச்சேரி, ஒக்.6

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை தவசிகுளம் போக்கட்டி அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேச சிறுவர் சபையின் தலைவர் நா. லக்ஸணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச உதவிப் பிரதேச செயலர் திருமதி தமிழினி சதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ரி-9)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவகுலம் 38 வயதுடைய நட்சத்திரம் மகம், இராசி சிங்கம், கொழும்பில் Electrician ஆக தொழில் புரியும் மணமகனுக்குப் பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

(cr 43360) (N-1)

077 641 6757

## வாடகைக்கு

Farm School, கருணை இல்லம் எதிரில் வாடகைக்கு உண்டு. 3000 சதுர அடி கொண்ட காணி அலுவலகம் / Medical Store போன்ற மற்றும் சகல விதமான வியாபார தேவைகளுக்கும் உகந்த இடம்.

(cr 43362) (N-1)

077 731 1407

## வேலையாள் தேவை

சைவ உணவகத்திற்கு சமையல், ரொட்டி மேக்கர், சப்ளையர், இடியப்பம் போடக்கூடியவர், பார்சல் கட்ட, பலகாரங்கள் செய்யக்கூடியவர் மற்றும் ஏனைய ஆட்கள் தேவை.
ஆண் / பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுகின்றது.
இடம் : ஆனைக்கோட்டை
அசைவ உணவகத்திற்கும் ஆட்கள் தேவை.

(CS/56384) J-1

075 238 7405, 077 055 6949

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 05 1966



மறைவு 04 10 2024

## திரு.நவரத்தினசிங்கம் சுரேந்திரன்

(Director, Seagull Property Developers (Pvt) Ltd)

கரவெட்டி சாமியன் அரசடியைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.நவரத்தினசிங்கம் சுரேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் 04.10.2024 வெள்ளிக் கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற நவரட்ணசிங்கம் வேதநாயகி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - தணிகாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் யசோதாவின் அன்புக்கணவரும் ஹரிதர்ஷன் (ஹரி) அவர்களின் பாசமிகு தந்தையும் Dr.ஜனகன், ஜசோதா காலஞ்சென்ற வாகீசன் ஆகியோரின் அன்புசகோதரனும் சுபோதினி, விநாயகமூர்த்தி, ரஜனி, ஜயந்த் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 06.10.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணிவரையும் 07.10.2024 நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரையும் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் மு.ப. 11.00 மணியளவில் ஆரம்பமாகி பி.ப. 2.00 மணியளவில் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு துயருடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : சிவதாசன்
தொ.இல- 0773315402

## J.K Farm
### அளவெட்டி

**அசோல விற்பனைக்கு உண்டு.**

கால் நடைகளுக்கும் கோழிகளுக்கும் வேண்டிய அதிக புரதச் சத்துக் கொண்ட விசேடவகை உணவாகும். மற்றும் நாற்றுத் தேவைகளுக்கும் எங்களை நாடலாம்.
அறிமுக விலை, ரூபா. 150/= per kg
தொடர்புகளுக்கு: தொலைபேசி இலக்கங்கள்
074 375 9985, 05 7720 604, 075 6425724

இ.சாரங்கன்
முகாமையாளர்

(CR/43364) J-1

## Apartment வீடு விற்பனைக்கு

PEREIRA LANE, வெள்ளவத்தையில் GALLE ROAD, DELMON HOSPITAL & MARKET க்கு மிக அருகாமையில் அமைந்துள்ள 2 BEDROOM WITH 1 BATHROOM உள்ள தொடர்மாடி வீடு விற்பனைக்கு உண்டு.

## 10 ACRE காணி விற்பனைக்கு

POINT - PEDRO மருதங்கேணி வத்திராயன் கிழக்கு கிராமசேவகர் அலுவலகத்திற்கு அருகாமையில் புதிய காப்பற் வீதியில் (அரசடி வீதி) அமைந்துள்ள 10 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0772680029
+14165560642 (WhatsApp)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹமாஸ் தளபதி பலி

வடக்கு லெபனானின் நகரமான திரிபோலியில், இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஹமாஸ் தளபதி சயீத் அட்டால்லா கொல்லப்பட்டுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. எனினும், ஹமாஸ் அமைப்பு எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை. (ம)

## அல் குவைதா தாண்டவம்

ஆபிரிக்க நாடான புர்கினா பாசோவில், அல் குவைதா பயங்கரவாதிகளால் கடந்த மாதம் 24ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் சுமார் 600 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

## ஹவுத்தி மீது தாக்குதல்

ஏமனில் உள்ள ஹவுத்தி போராளிகளின் நிலைகள் மீது, அமெரிக்கா தலைமையிலான படைகள் நேற்றுத் தொடர்ச்சியான வான் தாக்குதல்களை நடத்தியுள்ளன. ஹவுத்தியால் நேற்று முன்தினம் பிரிட்டன் கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

### வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ்நகரில் இருந்து 15 km தூரத்திற்குள் தனி வீடு அல்லது அனெக்ஸ் தேவை.

(cs.56350) (N-1)

**077 618 0675**

### வீடு விற்பனைக்கு

வெளிநாடு செல்ல இருப்பதால் உடன் விற்பனைக்கு

1100 SQFT, 3 Bedrooms, 34 Million

விலை குறைவில் Brand New Home

Dehiwala

No Brokers **077 5222 613**

### வீடு விற்பனைக்கு

கொழும்பு 13 ஜெம்பெட்டா தெரு தோட்டத்தில் 2வது மாடியில், 600 Sqft, 2 அறைகள், பாத்ரூம், கிச்சன் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு. குடியிருப்பு மற்றும் சிறு தொழில்கள் செய்வதற்கு உகந்தது. எதிர்பார்க்கும் விலை 67 லட்சம்.

(CS/43356) J-1

Contact: **071 605 0074**

### பெயர்மாற்றம்

அரசடி அல்வாய் வடக்கு அல்வாயில் வசிக்கும் **சிவதாசன் தயாபதி** ஆகிய நான் எனது பெயரை **சிவதாசன் தயாவதி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சிவதாசன் தயாவதி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(CS/56381) J-1 **சிவதாசன் தயாவதி**

### காணி விற்பனைக்கு

மீசாலை புத்தூர் சந்தியில் A9 வீதிக்கு அண்மித்ததாக இரண்டே முக்கால் பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(cs 43551) (N-1)

**077 767 7123**

### ENGLISH CLASSES

GRADE 06 - 11

Basic

கற்பிக்கப்படும்.

(CS/1530) J-1

**077 841 9507**

### சுத்திகரிப்புப் பணியாளர் தேவை

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அங்கர் கிளீனிங் சேவையூடாக சுத்திகரிப்பு பணியாளராக கடமை புரிய விருப்பம் உள்ளவர்கள் பின்வரும் இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

- ஒரு நாளுக்கான கூலி 1500/-
- E.P.F, E.T.F செலுத்தப்படும்

(CS/29054) J-1

**T.P - 077 239 2850, 077 791 6693**

அங்கர் கிளீனிங் சேவிஸ், வவுனியா.

### மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1997 கேட்டை உதயத்தில் செவ்வாய் உள்ள MBA பட்டதாரி HSBC முன்னாள் உதவி முகாமையாளர் தற்போது Netherland இல் தொழில்புரியும் மணமகனுக்கு யாழ் மகளிர் கல்லூரிகளில் கற்ற (BSc) குடும்பப்பாங்கான மணமகள் தேவை.

**077 433 4875**

### Vacancy

We are Hiring

Data entry operator / Call centre executives School leavers can apply Training will be provide.

More info:

www.koceansoft.com/careers

E-mail your cv to:

koceansoft@gmail.com

(CS/56377) J-1

Whatsapp:- **077 810 2522**

### பணிப்பெண் தேவை

**கொழும்பில்**

ஒரு சிறு குடும்பத்திற்கு வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**0767 999 020**

### மணமகன் தேவை

1. வட்டுக்கோட்டை, இந்து கௌரவகுலம். 1994. மூலம். MBBS, Doctor, Switzerland Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
2. வேலணை - திருநெல்வேலி. இந்து கௌரவகுலம். 1996. அத்தம். MBBS, Doctor, Germany Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
3. சங்கானை - KKS, இந்து கௌரவகுலம்.1998, அத்தம். BSc Accountaing With Aconomics, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
4. அச்சுவேலி. இந்து கௌரவகுலம்.1992, திருவாதிரை. Graduate, Accountant, UK Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
5. கரவெட்டி. இந்து. கௌரவ குலம். 1995, அவிட்டம் LLB Lowyer, Australia Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
6. சாவகச்சேரி. இந்து கௌரவகுலம். 1993, கார்த்திகை. Civil Engineering Degree, Australia Citizen மணமகளுக்கு மணமகன் தேவை.
7. நெடுந்தீவு. இந்து. கௌரவகுலம். 1983, சித்திரை, B.A., Development Officer, Divorce மணமகளுக்கு மணமகன் தேவை.
8. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் 1978 உத்திரட்டாதி. B.A, Canada Citizen, Widower மணமகளுக்கு மணமகன் தேவை.
9. நல்லூர். இந்து கௌரவகுலம் 1994, ஆயிலியம். Charted Accountant Canada Citizen Divorce மிகவும் அழகான மணமகளுக்கு மணமகன் தேவை.

S.Sharma J.P. **077 539 3728**

www.thaalee.com whatsap: **077 803 8193**

(cs.56375)(N-1)

### தென்னங்காணி விற்பனைக்கு

எழுது மட்டுவாழ் A-9 வீதியிலிருந்து 2 km தூரத்தில் 3 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு.

(cs 1535) (N-1) **077 239 0780**

### கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம். சங்கானை நகர மத்தியில் பஸ்நிலையம் மற்றும் மத்திய சந்தைக்கு மிக அருகில் பிரதான வீதியில் 650 சதுர மீற்றர் இடம் விற்பனைக்குண்டு.

**077 943 4738**

### மணமகள் தேவை

யாழ். இந்து (V) சைவர் 1983 இல் பிறந்த 41 வயதுடைய டென்மார்க் பிரஜாவுரிமையுடைய **டுபாயில் விமானி Captain** ஆக தொழில்புரியும் விவாகரத்தான **மணமகனுக்கு** 30 - 35 வயதிற்கு இடைப்பட்ட ஓரளவு கல்விகற்ற ஆங்கிலம் தெரிந்த **மணமகள் தேவை.**

(CS/56378) J-1

Whatsapp:- **0045 222 60771**

### காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு

பலாலி வீதி. கோண்டாவில் அம்மாச்சி உணவகத்திற்கு அருகாமையில் 3 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்:

**071 427 5864, 077 978 9571**

### விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பலன்புறுட், ரகன் புறுட், செவிலை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம் நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு, கிளை:
பிள்ளையார் கோயில் வீதி. K.K.S. வீதி, இணுவில்
கணேசா பாடசாலை அருகில் 077 612 9343

### Richard — விநியோக முகவர்கள் மற்றும் விற்பனை பிரதிநிதிகள் தேவை

சர்வதேச மற்றும் உள்ளூர் விருது பெற்ற

**RICHARD TRADING Pvt Ltd.**

பயிற்சி புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்களின் உற்பத்தியாளர், விற்பனையை விரிவுபடுத்துவதற்கு பின்வரும் பகுதிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்து வருகிறது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கவும்.

**1. விநியோகஸ்தர்கள்**

எதிர்பார்க்கப்படும் தகுதிகள்- வங்கி உத்தரவாதம் போக்குவரத்து வசதி கிராம சேவை சான்றிதழ்

**2. விற்பனை பிரதிநிதிகள்**

அனுபவம் வாய்ந்த மற்றும் புதிய விண்ணப்பதாரர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.


**மதவச்சி, புத்தளம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, கிளிநொச்சி, காத்தான்குடி, ஏறாவூர்**

077 354 0002 | 077 354 0021

Area - Vavunia,kilinochchi, Batticaloa, Trincomalee, Kattankudi, Eravur, Puttlam.

### காணி விற்பனைக்கு

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் பருத்தித்துறை வீதியிலிருந்து 100 m தூரத்தில் 14 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.



02 பரப்பாகவும்

01 பரப்பாகவும்

11/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்

(cs.1522) (N-1)

தொடர்பு: **077 836 3050**

**075 889 5625**

### முகாமையாளர் பணிநிலை வெற்றிடம்

வல்வை முதியோர் இல்லத்தினை முகாமைத்துவம் செய்வதற்குத் தகுதி / அனுபவம் உடையவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. க.பொ.த உயர்தரம் (A/L) சித்தி அடைந்துள்ளதுடன் போதுமான முகாமைத்துவ அனுபவமும் எதிர்பார்க்கப்படுகின்றது. தகுதி / அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு சம்பளம் நேர்முகத்தேர்வில் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-

**நிர்வாகி**

**வல்வை முதியோர் இல்லம்**

**வல்வெட்டித்துறை**

021 226 5551, 077 810 6857 , www.valvaieldershome.com

(CS/56380) J-1

### மணமகன் தேவை

1987, இந்து, விசாகம், **Development Officer,**

பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - யாழ்ப்பாணம்

மணமகள் பதிவு இல: 11068.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

www.EQMarriageService.com

இணையவழி திருமணசேவை

**10-10-2024 வரையான பதிவுகளுக்கு 20% விலைக்கழிவு**

(cs.29035) (N-1)

அழையுங்கள் **076 664 9401**

### மணமகள் தேவை

1997, இந்து, றோஹிணி, **I.T Support,**

பூர்வீகம் - பூநகரி ,வதியுமிடம்- **Swiss**

மணமகன் பதிவு இல: 11003.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

www.EQMarriageService.com

இணையவழி திருமணசேவை

**10-10-2024 வரையான பதிவுகளுக்கு 20% விலைக்கழிவு**

(cs.29035) (N-1)

அழையுங்கள் **076 664 9401**

### மணமகள் தேவை

1996, இந்து, திருவாதிரை, **Software Engineer,**

பூர்வீகம் - மந்துவில், வதியுமிடம்- கொழும்பு

மணமகன் பதிவு இல: 11021.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

www.EQMarriageService.com

இணையவழி திருமணசேவை

**10-10-2024 வரையான பதிவுகளுக்கு 20% விலைக்கழிவு**

(cs.29035)(N-1)

அழையுங்கள் **076 664 9401**

### மணமகன் தேவை

1996, இந்து, சதயம், **Software Engineer,**

பூர்வீகம் - காரைநகர், வதியுமிடம் - யாழ்ப்பாணம்

மணமகள் பதிவு இல: 11061.

தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.

www.EQMarriageService.com

இணையவழி. திருமணசேவை

**10-10-2024 வரையான பதிவுகளுக்கு 20% விலைக்கழிவு**

(cs.29035) (N-1)

அழையுங்கள் **076 664 9401**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் பிரதமர் மீது பைடன் கடும் அதிருப்தி

வொஷிங்டன், ஒக். 6

இஸ்ரேலின் பிரதமர் நெத்தன்யாகுவின் முடிவுகள் மற்றும் நகர்வுகளுக்கு அமெரிக்க அதிபர் பைடன் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

காஸாவில் போர் நிறுத்தம் மேற்கொள்ளப்படாமையும், ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்களும், இஸ்ரேல் மீதான ஈரானின் பதிலடித் தாக்குதல்களும் 'மத்திய கிழக்கில் அமெரிக்கா பலவீனப்பட்டுள்ளது' என்ற விம்பத்தை ஏற்படுத்தியுள்ளதால், இந்த விம்பம் அமெரிக்க அதிபர் தேர்தலில் கமலா ஹரிஸுக்கும் ஜனநாயகக் கட்சியினருக்கும் பின்னடைவைக் கொடுக்கும் என்று கருதப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, இஸ்ரேலின் பிரதமர் திட்டமிட்டு போர் நிறுத்தத்தைப் புறக்கணிக்கின்றாரா என்று தனக்குத் தெரியவில்லை என்றும், வேறு எந்தவொரு அமெரிக்க அதிபரும் வழங்காத ஆதரவை நான் இஸ்ரேலுக்கு வழங்கினேன் என்பதை அவர் நினைவில் கொள்ளவேண்டும் என்றும் பைடன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு மிகவும் நெருக்கமானவராகவே ட்ரம்ப் அறியப்படுகின்றார். இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்தவரும் ட்ரம்ப்தான். எனவே அவரை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காகத்தான் மத்திய கிழக்கில் தாம் அழிவின் விளிம்பில் உள்ளதான தோற்றப்பாட்டை இஸ்ரேல் உருவாக்கி வருகின்றது என்று ஜனநாயகக் கட்சியினர் கடந்த சில நாள்களாகக் குற்றஞ்சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இதுவரையான...

சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. சர்வதேச நாணயநிதியத்தின் ஆசிய, பசுபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கை பொருளாதாரம் முகங்கொடுத்துவரும் பொருளாதார மற்றும் நிதியியல் சவால்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனும், அரசாங்கத்தின் பொருளாதார நிபுணர் குழுவினருடனும் செயற்றிறன்மிக்க பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தோம். இதன்போது 2022ஆம் ஆண்டு மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்ததன் பின்னர், நாட்டை மீண்டும் பொருளாதார மீட்சிப்பாதையில் கொண்டுசெல்வதற்கு உதவிய, மிகக் கடினமான முயற்சிகளின் ஊடாக வென்றெடுக்கப்பட்ட அடைவுகளைத் தொடர்ந்து பாதுகாப்பதுடன், அவற்றை அடுத்தகட்டத்துக்குக் கொண்டுசெல்லவேண்டியதன் அவசியத்தை இருதரப்பினரும் ஏற்றுக்கொண்டோம்.

சர்வதேச நாணயநிதியத்தால் அனுசரணை அளிக்கப்படும் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டம் தொடர்பான மூன்றாம் கட்ட மீளாய்வுக்கான திகதியொன்றை நிர்ணயிப்பதற்குரிய நடவடிக்கைகளை சர்வதேச நாணயநிதியமும் இலங்கையின் பொருளாதாரக் குழுவும் இணைந்து முன்னெடுக்கும்" - என்றார். (அ-ம)

## டிஜிற்றல்...

பிரதமர் ஹரிணியிடம் வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் நேற்றுமுன்தினம் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு, ஜனாதிபதி அநுர, பிரதமர் ஹரிணி உள்ளிட்ட முக்கியமான புள்ளிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் போதே இலங்கையில் ஊழல் ஒழிப்பு உள்ளிட்ட துறைகளில் டிஜிற்றல் பயன்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தியதுடன், இந்தியா தன்னால் இயன்ந்த அத்தனை ஒத்துழைப்பையும் வழங்கும் என்றும் தெரிவித்துள்ளார்;.

இலங்கை போன்ற அண்டை நாடுகள் இந்தியாவுக்கு மிகவும் முக்கியமானவை என்றும் இந்தியாவில் இலங்கை பற்றிய மிகுந்த நல்லெண்ணம் இருப்பதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுடனான சந்திப்பின்போது தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர், தனது நெருங்கிய கடல்சார் அண்டை நாடாகவும் நெருக்கடியில் கைகொடுக்கும் நட்பு நாடாகவும் இலங்கைக்கான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை வலியுறுத்துவதே தனது விஜயத்தின் முக்கியமான நோக்கம் என்றும் கூறியுள்ளார்.

இதற்கு, பல வருடங்களாக இலங்கைக்கு இந்தியா வழங்கிய உதவிகளுக்கு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நன்றி தெரிவித்ததுடன் இலங்கையின் விரைவான பொருளாதார அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக இந்தியாவின் ஆதரவின் அவசியத்தையும் கோரினார். (அ-ம-இ)

## 7,500...

மேற்பட்டவர்களுக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவகலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையில் அதிகளவான கண் சத்திரச்சிகிச்சை மேற்கொள்கின்ற நிலையமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை காணப்படுகின்றது என்றும் மருத்துவகலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (அ-ம-66)

## சிறுவனொருவன்...

ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்த நிலையில், மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-19)

## பொதுத்...

கூட்டணியின் பிரதமர் வேட்பாளரும், ஐக்கியமக்கள்சக்தியின் தலைவருமான சஜித் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பொதுத்தேர்தலை எதிர்கொள்வதற்கு தயாராகி வருகின்றோம். வேட்புமனு தயாரிப்புப் பணி தற்போது இடம்பெற்றுவருகின்றது. பொதுச்செயலாளர் தலைமையிலான குழுவொன்றே இதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்களில் பெரும்பாலானவர்கள் எம்முடன் இணைவதற்குத் தயார் நிலையில் உள்ளனர். ஐக்கிய மக்கள் கூட்டணியாகவே நாம் பொதுத்தேர்தலில் களமிறங்குவோம்.

பொதுத்தேர்தலில் நாடாளுமன்றத்தில் சாதாரணப் பெரும்பான்மையை எப்படியும் பெறுவோம் என்பதைவிட, ஜனநாயக வழிமுறையில் நாம் வெற்றிபெறுவோம். பொதுத்தேர்தலில் வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கை உள்ளது" - என்றார். (அ-ம-44)

## இலங்கையில்...

சர்வதேச நாணயநிதியத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூலி கொஸாக் இது தொடர்பில் அண்மையில் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச நாணயநிதியத்தால் இலங்கையுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கும் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டம் தொடர்பான இரண்டாம் கட்ட மீளாய்வு கடந்த ஜூன் மாதம் 12ஆம் திகதி பூர்த்திசெய்யப்பட்டது. அதனையடுத்து இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்புக்கு உதவக்கூடிய வகையில் 336 மில்லியன் டொலர் நிதி உடனடியாக விடுவிக்கப்பட்டது.

பொருளாதார நடத்தைக் குறிகாட்டிகள் வலுவானவையாகக் காணப்படுவதுடன் மேம்பட்ட பொருளாதார வளர்ச்சி, பணவீக்க வீழ்ச்சி, உயர்வான கையிருப்பு, வருமான உட்பாய்ச்சல் அதிகரிப்பு என்பன உள்ளடங்கலாக மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மூலமான விளைவுகளும் நேர்மறையான விதத்தில் பதிவாகியிருக்கின்றன.

இருப்பினும் நாம் ஏற்கனவே கூறியிருந்ததைப்போன்று நலிவுற்ற நிலையும், நிச்சயமற்ற தன்மைகளும் தொடர்கின்றன. ஆகவே மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுப்பது மிக அவசியமாகும் - என்றார். (அ-ம)

## நாணய...

இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது. கடன்மறுசீரமைப்பு செயன்முறையின்போது ஆரம்பகட்டமாக எட்டப்படும் கொள்கை இணக்கப்பாடு தொடர்பான நிபந்தனைகள், 'அனைத்துக் கடன்வழங்குநர்களும் ஒரேவிதமாக நடத்தப்படல்' என்ற கோட்பாட்டுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றனவா? என்பது குறித்து உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழுவுடனும், சர்வதேச நாணயநிதியத்துடனும் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்தப் பேச்சுவார்த்தைகளே வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டிருப்பதாக நிதியமைச்சால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டிருக்கும் கொள்கை இணக்கப்பாட்டு நிபந்தனைகள் அனைத்துக் கடன்வழங்குநர்களும் ஒரேவிதமாக நடத்தப்படல் என்ற கோட்பாட்டுக்கு ஏற்புடையவையாகக் காணப்படுவதாக உத்தியோகபூர்வ கடன்வழங்குநர் குழு உறுதிப்படுத்தியிருப்பதாகவும், அதேவேளை அந்த நிபந்தனைகள் விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்றிட்டத்தின் மட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருப்பதாக சர்வதேச நாணயநிதிய அதிகாரிகளும் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ-ம)

## பஸில்...

என்று கட்சி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஓரிரு தினங்களுக்கு முன்னதாக பஸில் ராஜபக்ச அமெரிக்கா சென்றிருந்தார். ஜனாதிபதித் தேர்தலில் அநுர வெற்றிபெறப் போகின்றார் என்ற அச்சத்தாலேயே அவர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றுள்ளார் என்று அப்போது தகவல்கள் வெளிவந்திருந்தன.

எனினும் இந்தத் தகவல்களை பொதுஜன பெரமுன மறுத்திருந்தது. 'பஸில் ராஜபக்ச மருத்துவத் தேவைக்காகவே அமெரிக்காவுக்குச் சென்றுள்ளார். பொதுத்தேர்தலில் கட்சியை வழிநடத்த அவர் நாடு திரும்புவார்' என்று பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் அறிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, பஸில் மீண்டும் நாடு திரும்ப மாட்டார் என்று தற்போது தகவல்கள் வெளிவந்துள்ளன.

பொதுத்தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தற்போது ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 11ஆம் திகதியுடன் வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் முடிவடைகின்றன. பஸில் ராஜபக்ச இதுவரை நாடு திரும்பவில்லை என்பதால், இனியும் அவர் நாடு திரும்பமாட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## உண்ணிக்...

சத்தியசீலன் சானுஜா (வயது- 19) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். காய்ச்சல் காரணமாகக் குறித்த யுவதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் உண்ணிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டு கடந்த 10 நாள்களாக தொடர்ந்து சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போதிலும், அவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66)

## பேருந்தில்...

1955 எனும் அவசரத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இதுதொடர்பான முறைப்பாடுகளை முன்வைக்க முடியுமெனவும் தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஸ்டம் தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் டைக் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 077 248 7774
A/L 2026
தொழினுட்பப் பிரிவு
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
05.10.2024 காலை 8.01
➡ தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்
➡ அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
தொடர்புகளுக்கு:- 077 248 7774 / 076 552 9093
"தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு" இதுவே எமது இலக்கு



## மரநடுகை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.6

'மகாத்மாகாந்தியின் 155 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு யாழ்.இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்.கலாசார மத்திய நிலைய வளாகத்தில் கடந்த புதன்கிழமை மரநடுகை இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ். இந்தியத்துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஸ்ணேந்திரன் மற்றும் யாழ். இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ரி-66-20)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் பளையில் (அரசர்கேணி கிராமம்) 44 நிலப்பரப்பு 6 3/4 குளி உடைய காணி விற்பனைக்கு உண்டு. (உரிமையாளருடன் தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் - 10.00 am - 5.00 pm)
074 109 2431
(CS/56355) J-1

**உடனடி விற்பனைக்கு**
LJ xxxx கோல் ஹொமட் நல்ல நிலையில் உள்ள 6 சில்லுகளைக் கொண்ட லொறி விற்பனைக்கு உண்டு.
7150000/-
077 587 8273, 077 977 2575
(CS/56368) J-1

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ். பிறவுண் வீதியை அண்மித்த பகுதியில் குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை.
T.P. 074 070 2678
(CS/56385) J-1

**வாடகைக்கு/ குத்தகைக்கு**
காட்சியறை மற்றும் காரியாலயம், களஞ்சியங்கள் போன்றவற்றிற்கு உகந்த இடம். கே.கே.எஸ் பிரதான வீதி, கோண்டாவிலில் வாடகைக்கு / குத்தகைக்கு உண்டு.
ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
075 087 3991, 071 352 6991
(CS/56389) J-1

**வேலையாள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல்யமான தொழிற்சாலை ஒன்றிற்கு பின்வரும் வேலையாள் தேவை.
பொதிசெய்பவர்
076 368 1315
(cs.56351) (N-1)

**தேவை**
கன்டர் ரக வாகனம் ஓடுவதற்கு AD வாகன சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள ஒருவர் தேவை. (யாழ்ப்பாணம்)
T.P : 076 821 9414

**காணி விற்பனைக்கு**
யாழ். மயிலிட்டி காங்கேசன்துறையில் 8 1/2, பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 074 234 3241
(cs.56370) (N-1)

**வீட்டு உதவியாளர் தேவை**
வீட்டில் தங்கி இருந்து வீட்டு உதவிகள் செய்ய கூடிய வீட்டு பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்.
இடம்: சாவகச்சேரி
தொடர்பு: 077 700 2552

**மணமகள் தேவை**
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வெளிநாட்டுக் குடியுரிமையும் கொண்ட இந்து பொறியியளாளர் மகனிற்கு உயர்கல்வி கற்ற. 37 வயதிற்கு மேற்படாத மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தரகர் வேண்டாம்.
T.P/WhatsApp +947 649 40299
(cs.43350) (N-1)

**சமையலாள் தேவை**
யாழ். நகரில் தனியார் நிறுவனம் ஒன்றில் தனிநபர் ஒருவருக்கு சமையல் செய்யக்கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.
0777 17 22 17
(CR/43359) J-1

**காணி விற்பனைக்கு**
யாழ்பாணம் உரும்பிராயில் 24 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு செல்லத்துரை வீதி முகப்புடன்
➤ குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
➤ உரும்பிராய் சந்தி 750m தூரம்
➤ உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காப்பற் வீதி 250m தூரம்
➤ நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்லசூழல்
➤ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
➤ 20 அடி பாதையுடன்
பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00 வரை
தொடர்புகளுக்கு:
077 288 0152, 076 739 0413

**காணி விற்பனைக்கு உண்டு**
➤ யாழ்ப்பாணம் கைதடியில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு A9 வீதி முகப்புடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
➤ பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
➤ தரகர் தேவையில்லை
➤ 20 அடி பாதையுடன்
தொடர்புகளுக்கு:
070 168 3354, 070 668 3354
(CS 56372) J-1

ஈழத்து சித்தர்கள் சித்தம்
தொகுப்பு : ஆத்மஞான பூரணர்
நூல் வெளியீட்டு விழா
இடம் : பூரண நிலையம், பலாலி வீதி, யாழ். ஊரெழு
காலம் : 06.10.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி
நிகழ்ச்சிகள் : மேலைத்தேயத்தவர்களின் தமிழ் பஜனை
புத்தக வெளியீடு
ஆன்மீக உரை
நூல் வழங்கல் (இலவசம்)
தொடர்புகளுக்கு: 076 710 0000, 077 431 1743



**காணியுடன் வீடு விற்பனைக்கு**
A9 வீதி அரியாலை நெடுங்குளம் சந்தியிலிருந்து 500 அடி தூரத்தில் 3 பரப்புக் காணியுடன் 3 மாடித் தளங்களை கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு.
077 575 0882
(cs.56374) (N-1)

**காணி விற்பனைக்கு**
➤ யாழ்ப்பாணம் - காடிவளை இளவாளையில் வீட்டுடன் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
➤ நன்னீர் வசதி உள்ளது. (குழாய்க்கிணறு மற்றும் பொதுக் கிணறும் உண்டு)
➤ மின்சார வசதி உண்டு
➤ சிறந்த சுற்றுச் சூழல்
➤ போக்குவரத்து. பாடசாலை. வைத்தியசாலை. ஆலயம். கடைகள் அருகில் உள்ளன.
➤ அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களைக்கொண்டு அளந்து விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
மேலதிக தொடர்புகளுக்கு:
077 715 9233
(cr.43276) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் [illegible] இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி

Registered as a Newspaper

ஒண்கதிர் வான்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூஉம்
குன்றிய சீர்மைய ராயினும் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

—நாலடியார்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | புரட்டாதி 20 | ஞாயிற்றுக்கிழமை (06.10.2024) | சிகரம் :221

# அரசியல் பகடையாகும் ‘பார் பெர்மிற்’

நிலாந்தன்



ஜனாதிபதி அநுர. பார் பெர்மிற் மதுச்சாலை அனுமதிகள் தொடர்பான விடயத்தைக் கைவிட்டாலும் சுமந்திரன் அதனைக் கைவிடமாட்டார் போலத் தெரிகிறது என்று ஒரு வெளிநாட்டில் வசிக்கும் நண்பர் முகநூலில் எழுதியுள்ளார். அதில் உண்மை உண்டு. தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு பகுதியினருக்கு ரணில் விக்கிரமசிங்க மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களை வழங்கினார் என்ற குற்றச்சாட்டை பொதுவெளியில் அதிகமாக முன்வைத்ததும் அதைப் பிரசித்தப்படுத்தியதும் சுமந்திரனும் அவருடைய அணியினரும்தான். ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன் வசப்படுத்துவதற்கு அவ்வாறு மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களை வழங்கியதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்றது. தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளே தமது சொந்த மக்களுக்கு மது விற்கிறார்கள் என்பது தமிழ்ப் பொது உளவியலில் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய ஒரு குற்றச்சாட்டு. சுமந்திரன் அதை நன்கு விளங்கி தனக்கு எதிரான தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதிராக அதனை திட்டமிட்டுக் கட்டமைத்து வருகிறார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்திடம் மதுச்சாலைகளுக்கான அனுமதிப்பத்திரத்தை அல்லது எரிபொருள் விற்பனை நிலையத்துக்கான அனுமதிப் பத்திரத்தை வாங்குகிறார்கள். மதுச்சாலைகளையும் எரிபொருள் விற்பனை நிலையங்களையும் தாங்களே நடத்துகிறார்கள் அல்லது தங்களுடைய பினாமிகளுக்கு ஊடாக நடத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டு புதியது அல்ல.

ஆனால் தொகையாக ஒரு தொகுதி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது அவ்வாறு குற்றச்சாட்டுகள் வைக்கப்படுவது இதுதான் முதல் தடவை. அவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் மூலம் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை சிறுமைப்படுத்தலாம், மக்கள் முன் அம்பலப்படுத்தலாம் அவமானப்படுத்தலாம். அவர்களுடைய வாக்காளர்கள் மத்தியிலேயே அவர்களுடைய மதிப்பைக் குறைக்கலாம். அவர்கள் மீண்டும் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுவதையும் தடுக்கலாம்.

தமிழ்ப் பொதுப்புத்திக்குள் குடியாமை அதாவது மது அருந்தாமை என்பது ஓர் ஒழுக்கமாகக் கருதப்படுகின்றது. எனினும் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றிய பல சான்றோர், துறைசார் நிபுணர்கள் மதுப்பிரியர்களாக இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள்.

இங்கே பிரச்சினை எங்கு வருகிறது என்றால் மக்கள் பிரதிநிதிகள் மதுச்சாலை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுதான். அவ்வாறு குற்றஞ்சாட்டப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களில் ஒருவராகிய விக்னேஸ்வரன் அதை ஏற்றுக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியதன் விளைவாக இப்பொழுது சர்ச்சைகளுக்குள் சிக்கியிருக்கின்றார். ஆனால் குற்றஞ்சாட்டப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அவர் ஒருவர் தான் இதுவரை குற்றச்சாட்டு தொடர்பாக தனது வாக்காளர்களுக்கு தன்னிலை விளக்கத்தை வழங்கியிருக்கிறார். ஏனைய யாருமே அது தொடர்பாக வாய் திறக்கவில்லை. ஜனாதிபதி அநுர அந்தப் பட்டியலை வெளிவிடும்வரை காத்திருக்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் குற்றச்சாட்டுகளில் உண்மை உண்டா இல்லையா என்பதனை தமது மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய பொறுப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களில் மட்டுமல்ல காசுப் பெட்டி கைமாறியது, கள்ள 'டீல்'கள் செய்தது போன்றவை தொடர்பாகவும் வாய்திறக்க வேண்டும். இவை தொடர்பில் அவர்கள் கள்ள மௌனம் சாதிக்க முடியாது. இவைபோன்ற விடயங்களில் தமது சொந்த மக்களுக்குப் பொறுப்புக்கூற முடியாத அல்லது பதிலளிக்க முடியாத அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கத் தகுதியற்றவர்கள்.

தென்னிலங்கையில் இப்பொழுது “அநுர அலை” ஒன்று அடிக்கத் தொடங்கியிருக்கிறது. தமிழ் நோக்கு நிலையில் அது மெய்யான மாற்றம் இல்லைத்தான். ஆனாலும் அரசியலில் நேர்மையானவர்களையும் கண்ணியமானவர்களையும் தெரிவு செய்ய வேண்டும் என்ற பொது ஜன விருப்பத்தை அது மீண்டும் அரங்கில் பேசுபொருள் ஆக்கியிருக்கிறது. அந்த அலை தமிழ் மக்களையும் தொற்றிக் கொண்டுள்ளது. வரும் நாடாளுமன்றத் தேர்தலில் உண்மையானவர்கள், நேர்மையானவர்கள், கண்ணியமானவர்கள் போட்டியிட வேண்டும். குற்றச்சாட்டுக்கு இலக்கானவர்களும் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் அரசியலை தேக்க நிலையில் வைத்திருப்பதற்கு பொறுப்பானவர்களும் போட்டியிடக் கூடாது என்ற கோரிக்கைகள் வலிமையாக மேலெழுகின்றன. பெண்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவேண்டும், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும், தமது மக்களுக்கு பொறுப்புக் கூறத்தக்க நேர்மையானவர்கள், தகுதியுள்ளவர்கள் அரசியலுக்கு வர வேண்டும் என்ற கோரிக்கைகள் பரவலாக மேலெழுகின்றன.

இப்படிப்பட்டதோர் பின்னணியில் தமது அரசியல் எதிரிகளுக்கு எதிராக சுமந்திரன் அணியினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு வலிமை உண்டு. தமிழ்ப் பொதுப்புத்தியை பொறுத்தவரை மக்கள் பிரதிநிதிகள் மதுச்சாலை அனுமதிப் பத்திரங்களைப் பெற்றது, அல்லது தமது பினாமிகளின் ஊடாக மதுச்சாலைகளை நிர்வகிப்பது என்பது அவர்களைத் தகுதி நீக்கம் செய்யக் கூடியது. ஆனால் தன் அரசியல் எதிரிகளை அவ்வாறு தகுதி நீக்கம் செய்ய முற்படும் சுமந்திரன் அணி அந்த குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் தகுதியுடையதா? ஏனெனில் சுமந்திரன் எப்படிப்பட்ட ஒரு அரசியலை செய்கின்றார்? தமிழ் மக்களைச் சிதறடிக்கும் அரசியலைத்தான் அவர் செய்து வருகிறார். அவர் எல்லாவற்றையும் கொட்டிக் குலைக்கிறார். தனது சொந்தக் கட்சியையும் கொட்டிக்குலைக்கிறார்.

அவரும் தமிழ் மக்களுக்குப் பொறுப்புக் கூறாத ஒருவர்தான். அதைவிட முக்கியமாக, தமிழ் மக்களுக்கு எதிரான இனஅழிப்புத் தொடர்பில் பொறுப்புக்கூறத் தயாரற்ற சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டார். ஜனாதிபதித் தேர்தல் நடந்த பொழுது ஐ.நா. கூட்டத் தொடரும் நடந்து கொண்டிருந்தது. அங்கே போர்க்களத்தில் நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பாக சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகத்தின் அடுத்த கட்டத்தைத் தீர்மானிப்பது தொடர்பில் விவாதங்கள் நடந்து கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில் சஜித் பிரேமதாஸ பொறுப்புக் கூறல் தொடர்பில் தமிழ் மக்களுக்கு எந்த வாக்குறுதியையும் வழங்கவில்லை.

பொறுப்புக்கூறல் எனப்படுவது இறந்த காலத்தில் நிகழ்ந்த குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவது. இறந்த காலத்துக்கு பொறுப்புக்கூறத் தயாரற்ற ஒரு தலைவர் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் எப்படிப் பொறுப்புக் கூறுவார்? இந்த விடயத்தில் பொறுப்புக் கூறத் தயாரற்ற சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்று கேட்கும் ஒரு அரசியல்வாதி, தமிழ் அரசியலை எங்கே கொண்டு போய் நிறுத்த முயற்சிக்கின்றார்? தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட ஒரு நீதியைப் பெற்றுத் தர முயற்சிக்கின்றார்?

பிரதான அரசியல் விவகாரத்தில் தனது சொந்த மக்களுக்குப் பொறுப்புக் கூறாத ஓர் அரசியல்வாதி தனது அரசியல் எதிரிகள் சலுகையாக மதுச்சாலை அனுமதிகளைப் பெற்றது குறித்துக் குற்றம் சாட்டுகிறார். தனது அரசியல் எதிரிகளை சிறுமைப்படுத்தித் தோற்கடிக்க முயற்சிக்கும் அவர் எப்படிப்பட்ட ஓர் அரசியலை முன்னெடுக்கிறார்? தமிழ் மக்களைச் சிதறடிக்கும் ஓர் அரசியலைத்தானே முன்னெடுக்கிறார்? தனது அரசியல் எதிரிகளைக் குற்றஞ்சாட்டுவதன் மூலம் அவர் தன்னை குற்றமற்றவராகக் காட்டப்பார்க்கிறாரா?

கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் மிதவாத அரசியல் எனப்படுவது குற்றங்கள் மிகுந்ததாக, கண்ணியமற்றதாக, நேர்மையற்றதாக மொத்தத்தில் பொறுப்புக்கூறத் தயாரற்றதாக மாறிவிட்டது. அதற்கு சம்பந்தரும் பொறுப்பு, சுமந்திரனும் பொறுப்பு. சுமந்திரனை குற்றஞ்சாட்டும் ஏனைய தமிழ் அரசியல்வாதிகளும் பொறுப்பு.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரவுக்கு இன்னொரு கடிதம்

○ சோ.ப.

*மேன்மை தங்கிய அநுரகுமார திஸா நாயக்க அவர்களே!*

ச்சாக், சப்பெண்டிருக்கு. செஞ்சட்டைத் தோழரே! இது பரவாயில்லை. நீங்கள் பதவியேற்று ஒரு வாரமாகிறது. "இவர் என்ன செய்யப் போகிறார்?" எண்டு வெறும் வாயைச் சப்பிற பலருக்கு, இடைக்கிடை ஒரு பிடி அவல் போட்டுக் கொண்டிருக்கிறியள். மூண்டு பேரிலை ஒரு அமைச்சரவை! சிறிமாவுக்குப் பிறகு ஒரு பெண் பிரதமர்! வேறை எவன் செய்வான்? வாழ்க நீ எம்மான்!

செஞ்சட்டைச் சகோதரர்களை நினைக் கேக்கை - 1971, 1989 எண்டு ஓர் அசௌகரியம் வரத்தான் செய்யும்! அதை விடுவம், ஆர்தான் ஆயுதம் தூக்கேல்லை? ஆர்தான் ஆட்கொலை செய்யேல்லை?

மாக்ஸிய சித்தாந்தத்திலை சமயத்துக்கு இடமில்லைத்தான். 'மதம் மக்களுக்குத் தரப்படும் அபின்' என்பது தான் அடிப்படை. அதை சீரியஸா எடுத்த நீங்கள் தலதா மாளிகையைத் தாக்கலாமோ? நினைக்க நெஞ்சம் நடுங்கும்; பிறர்க்கதை உரைக்க நா நனிகூசும்! போகட்டும் என்றால், தேர்தலுக்கு ஓரிரு வாரம் முன்னாலை பௌத்த பீடாதிபதிகளைக் கும்பிட்டு, மரியாதை செய்தீர்கள் ஒரு குறையும் வைக்காமல்! தொலைக்காட்சிச் செய்திப் படங்களைப் பார்த்தவுடன் யோசிச்சன்: "பயல் பிழைச்சிடுவான்!"

ஆக, பல்லிச் சாத்திரங்களைப் பொய்யாக்கி விருப்பு வாக்குகளாலை நிமிர்ந்து எங்கடை அநுரகுமார திஸாநாயக்க ஸ்ரீலங்காவின் ஒன்பதாவது ஜனாதிபதி. காலங்காலமாக, "மக்களாட்சி", "அப்பே ஆண்டுவ" எண்ட கோஷம் வானை முட்டும். தேர்தல் முடிய பிரபுத்துவ குடும்பத் தோன்றல்கள் பிரதமர்களாக ஜனாதிபதிகளாக வருவர். புறநடைகளாக ஒரு பிரேமதாஸ, ஒரு தகநாயக்க போன்ற சில சாமானியர்களை விட்டால், எல்லாரும் மேட்டுக்குடியினர்.

இப்ப, ஒரு செஞ்சட்டைத் தோழர் ஜனாதிபதி! தம்புத்தேகம என்ற குக்கிராமத்துப் பொடியன் ஜனாதிபதி மாளிகை புகுவதாயின், முரசு முழங்கலாம், எக்காளம் ஒலிக்கலாம்!

ஆனால் தோழர், அவசரப்பட்டு மெய்ப்பாதுகாவலர்களைக் குறைத்துவிடாதீர்கள். உங்களுக்கு எதிரிகள் எங்கிருந்தும் கிளம்பலாம் பணக்கார வர்க்கத்துக்கு உங்களைப் பிடிக்காது. எச்சரிக்கை!

உங்களுக்குச் சோதிடத்தில் நம்பிக்கையிருக்காது என்றே நினைக்கிறேன். "அநுர அரசாள்வான்!" என்றொரு சோதிடர் சொன்னதாக இப்பொழுது கதையளக்கிறார்கள். எதற்கும் அவரிடம் உங்கள் சாதகத்தைக் காட்டுங்கள்.

"தமிழர்கள் ஏன் எனக்கு வாக்களிக்கவில்லை?" என்று விக்கினேஸ்வரனைக் கேட்டீர்களாம்! இதற்கு நீதியரசர் எதற்கு? சட்டம் படிக்காத நானே சொல்லியிருப்பன். வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வழக்குத் தொடுத்த உங்களைத் தமிழர்கள் மன்னிப்பார்களா?

தமிழர்கள் விசித்திரப் பிறவிகள். பொது வேட்பாளருக்கு வாக்களிக்காதவர்கள் துரோகிகள் என்று சொல்லிலிருந்த ஸ்ரீயின் கோட்டையாகிய கிளிநொச்சி வாக்காளர்களே அவர் சொல்லைக் கேட்கவில்லை. அந்தாள்கூட



*தமிழர்கள் சம்பந்தன் சொன்னதையும் கேட்கவில்லை. சங்கரி சொன்னதையும் கேட்கவில்லை. சுமந்திரன் சொல்வதையும் கேட்பதில்லை. வரலாற்றிலை அவர்கள் பிரபாகரன் சொன்னதைத் தான் கேட்டார்கள். அவர் கையில் துவக்கு இருந்தது. உங்கள் கையிலும் முந்தித் துவக்கு இருந்தபடியால் புரிந்து கொள்வீர்கள்!*

உங்களை வந்து சந்திச்சு, சுமுகமாப் பேசியிருக்கு! பிறகென்ன தோழர்! இனி உங்கள் காட்டில் மழை தான்! தமிழர்கள் சம்பந்தன் சொன்னதையும் கேட்கவில்லை. சங்கரி சொன்னதையும் கேட்கவில்லை. சுமந்திரன் சொல்வதையும் கேட்பதில்லை. வரலாற்றிலை அவர்கள் பிரபாகரன் சொன்னதைத் தான் கேட்டார்கள். அவர் கையில் துவக்கு இருந்தது. உங்கள் கையிலும் முந்தித் துவக்கு இருந்தபடியால் புரிந்து கொள்வீர்கள்!

அரசியலில் நிரந்தர எதிரிகளும் இல்லை; நிரந்தர நண்பர்களுமில்லை என்று நான் சொல்லி நீங்கள் அறிய வேண்டியதில்லை. ஜ.வி.பெரமுனவின் ஐந்து மூலாதாரக் கொள்கைகளுள் ஒன்று இந்திய மேலாதிக்கத்துக்கு எதிர்ப்பு. ஆனால் தேர்தலுக்கு முன்பே இந்தியாவுக்குப் போய்ப் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறீர்கள். யூ.கே. போய் வந்தீர்கள். இன்றைய பத்திரிகைகளில் அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங்கைச் சந்தித்த படம் கலக்குகிறது.

"எது நடந்ததோ அது நல்லாகவே நடந்தது!" என்கிறது [illegible]

மீண்டும் எழுதுவேன் தோழா!

# ஊர்ப்புதினம் பாகம் 2

○ இராகவன்

இந்தக்கிழமையோட ஊர்ப்புதினம் இரண்டாம் பாகம் வெற்றிகரமாக முடிவடையுது. இது வரைக்கும் மொத்தமா நூற்றியிருபது சப்றர் எழுதியிருக்கிறன். கிட்டத்தட்ட இரண்டு வரியம் தொடர்ந்து எழுதியிருக்கிறன். உண்மையில இப்பிடி வருசக்கணக்கில நானொருகாலமும் எழுதேல்ல. அப்பிடியெழுதினது இதுதான் முதல்தடவை. எனக்கு இப்பிடியொரு அருமையான வாய்ப்பினைத் தந்த உதயன் சஞ்சீவி ஆசிரியருக்கு மெத்தப் பெரிய உபகாரம், அவரென்னை ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் அலேர்ட் பண்ணாட்டில் இப்பிடியொரு விசயத்தை என்னால செய்திருக்கவே முடியாது. இதால எனக்கு என்னென்ன கிறெடிற் கிடைக்குதோ அதெல்லாம் உதயன் சஞ்சீவி ஆசிரியருக்குரியதுதான்.

மற்றது இந்தத்தொடரை இப்பிடியெழுதவேணும் அப்பிடியெழுதவேணுமெண்டு இவர் எனக்கு ஒரு கட்டுப்பாடும் இண்டை வரைக்கும் விதிக்கேல்ல. நான் எந்தவொரு ஒழுங்குமுறையையும் கடைப்பிடிக்காமல் இந்தத் தொடரை எழுதி வந்திருக்கிறன். அதையெல்லாம் அச்சில கொண்டு வந்த உதயன்சஞ்சீவி ஆசிரியருக்கு ஒரு சல்யூட். இந்தத்தொடரை மூண்டாம் பாகத்துக்குக் கொண்டுபோறதா இல்லையா எண்டதையும் உதயன் சஞ்சீவிஆசிரியர் தான் முடிவெடுக்க வேணும். இந்தத் தொடருக்கும் கணிசமான வாசகர் இருக்கினம் எண்டது மனதுக்குச் சந்தோசந்தருகிற சங்கதி. அதுவும் இந்தத்தொடரை வெட்டியொட்டிப் புத்தகமாய் பைண்ட பண்ணி பாலா அண்ணர்(பாலசுப்பிரமணியம்) சிவம் அண்ணர் (சிவசுப்பிரமணியம்) ஆக்கள் பேணிப்பாதுகாத்து வருவதாக நேரடியாக என்னைச் சந்திச்ச மூட்டம் சொல்லேக்குள்ள ஏதோ நானும் செய்திருக்கிறன் எண்ட மனநிறைவு எனக்கு ஏற்படுது.

60

"கட்டாயம் இதையொரு புத்தகமாய்ப் போட வேணுந்தம்பி!" எண்டு சிவம் அண்ணர் என்னிட்டச்சொன்னவர். இதெல்லாம் என்ர சக்திக்கு அப்பாற்பட்ட வேலை. உதயன் - சஞ்சீவிஆசிரியரும் கைவிடப் போறாரே ? பாப்பம். எது நடக்கவிருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும் எண்டு நம்புறன். இதிலயொரு சின்னக்கவலை. முதலாம் பாகத்தை முடிக்கேக்குள்ளை இரண்டாம்பாகம் முழுக்க எங்கடை சிவலிங்கண்ணை தான் (வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா) கதாநாயகன் எண்டு சொல்லியிருந்தன். ஆனால் அதை நிறைவேற்ற முடியாமல் போச்சு. மூண்டாம் பாகம் எழுதுறதுக்கு உதயன் சஞ்சீவி இடமளிச்சால் அதை நிறைவேற்றி வைக்கலாமெண்டு நினைக்கிறன். இந்த நேரத்தில ஊர்ப்புதினத்தை வாசிச்சிட்டு ஒவ்வொரு கிழமையுங் கோல் எடுத்து என்னைக் கலாய்க்கிற 'இருந்து கதைப்பம்', கோகுலராகவன் அண்ணை மற்றது நேரில சந்திக்கேக்குள்ள விதந்து புகழுற பாலண்ணை, சிவமண்ணை, கோகிலா மகேந்திரனின் மைத்துனர் புவனேந்திரமண்ணை (பேபியண்ணை, என்ர ஆருயிர் நண்பன் அல்கம (செல்லையா ஜெயமோகன்) நான் பிள்ளையெண்டழைக்கிற மணியம் பிள்ளை (பாக்கியநாதன்மணிக்குமார்) எனக்குக் காலம கருக்கலோட கோல் எடுத்துமுதலாளாகப் பிறந்தநாள் வாழ்த்துச்சொன்ன சிறியண்ணை (இயல்வாணன், அண்ணா எண்டு நான் உரிமையோடு அழைக்கும் அரவிந்தன்அண்ணா (உடுவில் அரவிந்தன்), கதிர் அண்ணை (தொல்புரம் சி. கதிர்காமநாதன்)" இன்னும் பெயர் குறிப்பிட மறந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்து இந்த இரண்டாம் பாகத்தை நிறைவு செய்கிறேன். நன்றி! வணக்கம்!

*(இரண்டாம் பாகம் முற்றும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(ஐந்தாவது தமிழியல் மாநாடு ஒக்ரோபர் ஏழாம், எட்டாம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டை நடத்தும் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் **பேராசிரியர் கி.விசாகரூபன்**, தமிழியல் மாநாடு தொடர்பான கருத்துகளை இந்த நேர்காணல் மூலம் பதிவு செய்கிறார்)

நேர்கண்டவர்: ச.கிறிஸ்ரினா
(ஊடகக்கற்கைகள் துறை,
மூன்றாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்)

# தமிழுக்கு மகுடம் சூட்டும் ‘தமிழியல் மாநாடு’

## புதிய தேடல்களுக்கும், ஆளுமைக்கும் களம்

**கே: யாழ். பல்கலைக்கழகம் தன் பொன் விழாவைக் கொண்டாடும் தருணத்தில் ஐந்தாவது தமிழியல் மாநாடு இடம்பெறவுள்ளது. அதனால் முன்னைய தமிழியல் மாநாடுகளை விட அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்ய என்னென்ன சிறப்பம்சங்கள் காத்திருக்கின்றன?**

ப: தமிழ்த்துறை ஏலவே நடத்திய பொருண்மைத் தடங்களில் இருந்து இந்த மாநாடு சற்று வித்தியாசப்படுகின்றது. ஈழத்து இலக்கியத்தை முற்றிலும் குவிமையப்படுத்துவதாக இந்த மாநாட்டின் தொனிப்பொருள் அமைந்துள்ளது. குறிப்பாக இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் குறித்து விசேட கவனக்குவிப்பை இந்த மாநாடு வெளிப்படுத்தி நிற்கிறது.

**கே: ‘இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழிலக்கியம்: இலக்கியத்தினூடான மானுட விடுதலை’ என்ற தொனிப்பொருளை இம்முறை தெரிவு செய்தமைக்கு ஏதேனும் சிறப்புக் காரணங்கள் உண்டா?**

ப: இருபதாம் நூற்றாண்டுப் பகுதியில் மானுட விடுதலைக்காக ஈழத்துப் படைப்பாளிகள் பலரும் தங்களுடைய படைப்புக்களினூடே குறிப்பிட்டுச் சொல்லத்தக்க கரிசனைகளை வெளிப்படுத்தி மானுட விடுதலை குறித்த அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவ்வாறான விடயங்களைப் பேசு பொருளாக்குதல் காலத்தின் கட்டாயமாகும்.

**கே: கடந்த மாநாடுகளிலும் பண்டிதர்கள், பாரம்பரியக் கலைஞர்கள் என்போரே தமிழியல் மாநாட்டில் கௌரவம் பெற்றனர். ஆனால் இம்முறை நவீன இலக்கிய ஆளுமைகளை கௌரவிப்பதன் பின்னணி யாது?**

ப: இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் பற்றிய தொனிப்பொருளில் இம்மாநாடு அமைவதால் இந்த இலக்கியப் பாரம்பரியத்தில் கோலோச்சிய அறிஞர்கள், படைப்பாளிகள் பலரும் உள்ளார்கள். அவர்களுள் சிலரை இனங்கண்டு வகைமாதிரியாக கௌரவிக்க உள்ளோம். குறிப்பாக பல்துறை உயராளுமைக்கான கௌரவத்தினை கலாநிதி எஸ். ஜெபநேசன், சிறந்த படைப்பாளிகளுக்கான கௌரவத்தினை சோ.பத்மநாதன், குந்தவை (இரா.சடாட்சரதேவி), அ.யேசுராசா, ஐ.சாந்தன் ஆகியோர் பெற இருக்கின்றார்கள்.

**கே: இருபதாம் நூற்றாண்டோடு தமிழிலக்கியமும் ஒரு தேங்கு நிலையிலேயே நிற்கின்றது என்று பொதுவாகச் சொல்லப்படுகின்றது. நவீன கோட்பாடுகளைப் பின்பற்றும் இலக்கியம் மக்களிடம் பெரிதாகச் சென்றடைவதுமில்லை. இந்த நிலையில் தமிழிலக்கியத் தேங்கு நிலையை உடைக்க தமிழியல் மாநாடு போன்ற நிகழ்வுகள் உத்வேகமாக இருக்குமென நம்புகின்றீர்களா?**

ப: இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் ஒரு தேங்கு நிலையில் இருப்பதாகக் கருத முடியாது. ஈழத்தவர்கள் இந்தக் காலப்பகுதியில் பல்வேறு புலங்களிலும் தங்களுடைய ஆளுமைகளை வெளிப்படுத்தியுள்ளார்கள். அந்த வெளிப்பாடுகள் தொடர்பான ஒரு மீள்வலியுறுத்துகையாக இந்த மாநாட்டின் பல்வேறு கட்டுரைகளும் அமைந்துள்ளமை தனிச் சிறப்புக்குரியதாகும்.

**கே: தொடர்ச்சியாக இந்த தமிழியல் மாநாட்டை நடத்துவதற்காக பின்னணியில் உங்களோடு தோளோடுதோள் நின்று துணைபுரிபவர்கள் பற்றி...?**

ப: முதலில் நன்றிக்குரியவர்கள் சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசு அறக்கொடையினர். அதற்கப்பால் சொல்லவேண்டுமானால் எங்களுடைய துணைவேந்தர் பேராசிரியர். சிவக்கொழுந்து சிறிசற்குணராசா, பேரவை உறுப்பினர்கள், கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் முதலானோர்களைக் குறிப்பிடமுடியும். நீண்ட காலமாக உறங்கு நிலையில் இருந்த இந்த நிதியை பயனுள்ள வகையில் ஆண்டு தோறும் தமிழாராய்ச்சி மாநாடு, அரிய நூல்களின் பதிப்பு, கலைஞர், படைப்பாளுமைக்கான கௌரவங்கள் எனச் செலவிடுவதற்கான பெரும் வாய்ப்பினை இவர்கள் வகிடு எடுத்து தந்துள்ளார்கள்.

**கே: இது ஐந்தாவது தமிழியல் மாநாடு. கடந்த நான்கு மாநாடுகளிலும் பார்வையாளர்களின் எண்ணிக்கை, பங்களிப்பு என்பன எவ்வாறு இருந்தன? முன்னரைக்காட்டிலும் அதிகளவான பார்வையாளர்கள் இம்முறை வருவார்களா அதற்கான ஏற்பாடுகள் யாவை?**

ப: இந்த மாநாடு ஏலவே நடைபெற்ற மாநாடுகளில் இருந்து சற்று வித்தியாசமானதாக அமைகிறது. இந்த மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வு இயல், இசை, நாடகங்களை உள்ளெடுத்த பெரும் கலை விழாவாக நடைபெறவுள்ளது. பல்கலைக்கழகம், கலைப்பீடம், தமிழ்த் துறை ஆகியன நடப்பாண்டில் பொன்விழாவைக் காண்கின்றன. இந்த மூன்று விடயங்களையும் உள்ளெடுத்த முப்பெரும் விழாவாக இந்நிகழ்வு அமையவிருக்கிறது. நீண்ட காலத்தின் பின்னர் கைலாசபதி கலையரங்கை பார்வையாளர்கள் நிறைக்க உள்ளனர்.

**கே: ஆட்சி மாற்றம், மக்கள் மனதில் எழுந்துள்ள மாற்றத்துக்கான அலை என்ற கொந்தளிப்பான சூழலில் இந்தத் தமிழியல் மாநாடு தன் இலக்கினை அடையுமா?**

ப: நிச்சயமாக அடையும். நாமும் இந்த மாநாட்டில் ஒரு மாற்றத்தினை நிகழ்த்தியிருக்கின்றோம். பாரம்பரியமான மரபு இலக்கியங்களில் இருந்து விடுபட்டு நவீன இலக்கியங்களின் பால் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றோம். இந்தியா, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்தும் கட்டுரைகள் கிடைத்துள்ளன. மாற்றம் ஒன்று தானே மாறாதது.

**கே: தமிழியல் மாநாட்டை சமூகத்துடன் இணைத்தமை பற்றி...?**

ப: பல்கலைக்கழகத்தின் பிற பீடங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே மாநாடு தொடர்பான விடயங்களைக் கொண்டு சென்றிருக்கின்றோம். குறிப்பாக வடமாகாணத்தின் அனைத்து வலயங்களிலும்; உள்ள பாடசாலை உயர்தர மாணவர்களிடையே தமிழறிவுப் போட்டியையும் பேச்சுப்போட்டியையும்; நடத்தியுள்ளோம். இந்தப்போட்டிகள் அனைத்தும் பல்கலைக்கழகத்துக்குள் நடத்தப்பட்டன. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா வலயங்களில் இருந்து கூட மாணவர்கள் திரளாகக் கலந்து கொண்டமை நமக்கு உற்சாகத்தைத் தருகின்றது.

**கே: இந்த மாநாட்டின் தொடர் நிகழ்வுகளாக எதையாவது குறிப்பிட விரும்புகிறீர்களா?**

ப: ஆம். ஏலவே தமிழ்த்துறை அரிய நூல்கள் பலவற்றை இந்த நிதியினூடாகப் பதிப்பித்து வெளிக்கொணர்ந்து அவற்றை இலவசமாக வழங்கியுள்ளது. அச்செயற்பாட்டின் நீட்சியாக மேலும் பல அரிய நூல்களை வெளிக்கொணர உள்ளோம். மாதாந்தக் கருத்தமர்வுகளுக்குத் திட்டமிட்டுள்ளோம். எழுத்துப் பட்டறைகள் தொடர்பிலும் ஆலோசித்து வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாமும் இந்த மாநாட்டில் ஒரு மாற்றத்தினை நிகழ்த்தியிருக்கின்றோம். பாரம்பரியமான மரபு இலக்கியங்களில் இருந்து விடுபட்டு நவீன இலக்கியங்களின் பால் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை ஈர்த்திருக்கின்றோம். இந்தியா, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்தும் கட்டுரைகள் கிடைத்துள்ளன. மாற்றம் ஒன்று தானே மாறாதது.**

**கே: இந்த மாநாடுகளில் கலந்து கொள்வதில் இளைய தலைமுறை குறிப்பாக மாணவர்கள் எவ்வளவு தூரம் ஆர்வம் காட்டுகின்றனர்?**

ப: மாணவர்களின் ஆர்வம் எமக்கு உற்சாகமூட்டுவதாக உள்ளது. மாணவர்களும் கட்டுரையாளர்களாக உள்ளார்கள். கடந்த ஆண்டில் பாடசாலை மாணவன் ஒருவன் கட்டுரை சமர்ப்பித்திருந்தமையைக் குறிப்பிட்டுச்சொல்ல விரும்புகின்றேன். தவிர பிற பல்கலைக் கழகங்களைச்சேர்ந்த ஆய்வாளர்களும் மாணவர்களும் தமது ஆராய்ச்சிக் களமாக இதனைக் கருதுகின்றமை எமக்கு மகிழ்ச்சியூட்டுவதாக உள்ளது. இரண்டாம்நாள் நிகழவுள்ள கவிதாநிகழ்வில் விரிவுரையாளர்களுடன் இணைந்து மாணவர்கள் பலரும் பங்கேற்றுச் சிறப்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**கே: தமிழ்த்துறையின் அனுசரணையுடன் பாலபண்டித கற்கைநெறி மீளவும் முன் கொண்டு செல்லப்படுவதாக அறிகிறோம். அதுபற்றி..?**

ப: ஆம். நின்று போயிருந்த இந்தக்கற்கை நெறியினை மீளவும் எமது மாண்பமை துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசா அவர்களுடைய பெரும் முயற்சியினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தொலைக்கல்வி நிலையத்தினூடாக உயிர் கொடுத்துள்ளோம். தமிழியல் நூலகத்தின் இணைச்செயற்பாடுகளில் ஒன்றாக, அந்நூலகத்தின் இணைப்பாளர் பிரதி நூலகர் கலாநிதி திருமதி. மைதிலி விசாகரூபன் அவர்கள் இந்தக் கற்கை நெறிக்கான இணைப்பாளராக இருந்து வருகின்றார். இந்தக்கற்கை நெறியில் உள்ளடங்கும் அடிப்படையான பாடப்பரப்புகளை பண்டிதர்களே கற்பித்து வருவது இதன் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். பண்டித பாரம்பரியத்தின் மரபு சிதையாமல் கற்கைநெறியினை வழங்கவேண்டும் என்பதில் துணைவேந்தர் உறுதியாக உள்ளார். இக்கற்கை நெறியில் இணைவது பற்றி வெளிநாடுகளில் இருந்தும் பலரும் ஆர்வம் காட்டுகின்றார்கள். அதற்கான வழிவகைகள் எதிர்காலத்தில் கண்டுகொள்ளப்படக்கூடிய வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. இவ்வாறு எமது மரபார்ந்த தமிழ்க்கற்கை நெறி மீள நடத்தப்படுவது கூட கடந்த தமிழியல் மாநாட்டின் உந்துதல்களின் விளைவெனவும் சொல்லலாம். ■

# ஈழத்தமிழிலக்கியத்தின்

## தமிழிலக்கியத்தில் தனியடையாளம் எழுத்தாளர் ஐ.சாந்தன்



ஈழத்து நவீன தமிழ் இலக்கிய உலகில் தனித்து அடையாளப்படுத் தத்தக்க ஓர் எழுத்தாளர் சாந்தன். தனது தமிழ், ஆங்கிலமொழி எழுத்துகளால் இலங்கைக்குள்ளும் இலங்கைக்கு அப்பாலும் பேசப்படும் ஓர் எழுத்தாளராக விளங்குகின்றார். தமிழிலும் ஆங்கிலத்திலுமாக இலங்கை சாகித்திய மண்டலத்தின் பரிசில்களை வென்ற ஒரே எழுத்தாளர் என்ற பெருமை இவருக்குரியது. 2010இல் இலங்கை சாகித்திய மண்டலம் இவருக்கு 'சாகித்திய ரத்னா' என்ற உயர் விருதினையும் வழங்கிக் கௌரவித்திருந்தது. 'இந்திய சாகித்ய அகாடமி'யின் 'பிரேம்சந்த் தகைசார் நல்கை' சாந்தனுக்குக் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இவற்றோடு இந்தியா, ராஜஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச இலக்கிய விழாவில், 'சாகித்திய ஸ்ரீ' அத்துடன் 'பெயர்வே' மற்றும் 'கொடகே' நிறுவனங்களின் சிறந்த ஆங்கில நாவலுக்கான விருதுகள், 'கொடகே' வாழ் நாள் சாதனை விருது, மாகாண இலக்கியப் பரிசு, முதலமைச்சர் விருது முதலான பல விருதுகள் இவரினை அணிசெய்துள்ளன.

1947ஆம் ஆண்டு மார்ச் மாதம் சுதுமலையில் பிறந்த ஐயாத்துரை சாந்தன் சுதுமலை சிந்மயபாரதி வித்தியாசாலை, மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்பனவற்றில் பயின்று, மொறட்டுவ உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் குடிசார் கட்டுமான பொறியியல் நெறிகள் பயின்றவர். லண்டன் 'சிற்றி அண்ட் கில்ட்ஸ்' நிறுவனத்தின் பொறியியல் பட்டம், யாழ். பல்கலைக்கழகத்தின் சூழல் முகாமைத்துவ முதுவிஞ்ஞானமாணிப் பட்டம், காமராசர் பல்கலைக்கழகத் தொலைக்கல்வி நிலையத்தின் ஆங்கில இலக்கிய முதுகலைமாணிப் பட்டம் ஆகியவற்றைப் பெற்றவர். தமது தொழில் வாண்மைக்கு அப்பால் பல்வேறு நிறுவனங்களில் குடிசார் பொறியியல் தொழில்நுட்ப விரிவுரையாளராகவும், ஆங்கில விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். ஆங்கிலம் தவிர ரஷ்ய, சிங்கள மொழிகளிலும் பரீச்சயம் பெற்றவர்.

1960களின் பிற்பகுதி முதலாகத் தொடர்ச்சியாக தமிழிலும் 1990ஆம் ஆண்டில் இருந்து ஆங்கிலத்திலும் எழுதிவருபவர் சாந்தன். ஐந்து சகாப்தங்களுக்கு மேலாக எழுத்துலகில் தீவிரமாக இயங்கியதன் பயனாக சிறுகதை, நாவல், குறுங்கதை, நெடுங்கதை, குறுநாவல் கடுகுக் கதைகள், தெறிப்புக் கதைகள் எனும் ஆக்க இலக்கியங்களில் தன் ஆளுமையை வெளிப்படுத்திப் பல தொகுப்புகளை வெளிக் கொணர்ந்துள்ளார். ஈழத்துச் சஞ்சிகைகள் பத்திரிகைகளில் மட்டுமன்றித் தமிழகத்துப் பிரபலமான சஞ்சிகைகளிலும் இவரது படைப்புகள் வெளிவந்திருக்கின்றன. 'பார்வை' (1970), 'ஒரே ஒரு ஊரிலே' (1975),'முளைகள்' (1982), 'கிருஷ்ணன் தூது' (1982), 'இன்னொரு வெண்ணிரவு' (1988), 'காலங்கள்' (1994), 'யாழ். இனிது' (1998), 'ஒருபிடி மண்' (1999), 'எழுதப்பட்ட அத்தியாயங்கள்' (2001), 'சிட்டுக்குருவி' (2014) என்பன அவரால் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுதிகளாகும். இவற்றோடு 'கடுகு' (1975) என்னும் குறுங்கதைத் தொகுதி ஒன்றும் அவரால் வெளியிடப்பட்டுள்ளது. 'ஒட்டுமா' (1978), 'சித்தன் சரிதம்' (2022)இ 'அசோகவனம்' (2023) ஆகிய நாவல்களையும் அவர் எழுதியுள்ளார். 'ஆரைகள்' (1985) என்னும் நெடுங்கதையும் 'விளிம்பில் உலாவுதல்' (2007) என்னும் குறுநாவல் தொகுப்பும் அவரால் வெளிக்கொணரப்பட்டுள்ளன.

அவரது பயணக் கட்டுரைகள், உலக இலக்கியங்கள் பற்றிய கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், சூழலியல், இலக்கிய அனுபவம் சார்ந்த கட்டுரைகள் என்பன அவரது ஆளுமையின் மற்றோர் பரிமாணத்தினை எடுத்துக்காட்டுவனாக அமைந்துள்ளன. 'ஒளி சிறந்த நாட்டிலே' (1985), 'காட்டு வெளியிடை' (2007), எழுத்தின் மொழி (2020), 'மணிப்பூர் நினைவுகள்' (2024) என்பன ரஷ்ய, கென்ய, இந்திய பயண அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட பயணக்கட்டுரைகளாகும். 'இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்' (2005) என்னும் அவரது கட்டுரைத் தொகுப்பு தமிழ் வாசகர்களுக்கு உலக இலக்கியப்பரப்பினை அறிமுகம் செய்யும் மிகச்சிறந்த முயற்சியாக அமைந்துள்ளது. இந்தக் கட்டுரைத் தொகுப்பின் முக்கியத்துவம் கருதி சென்னையிலுள்ள அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம் அதனை இரண்டாவது பதிப்பாக 'உலக இலக்கியம்' என்னும் தலைப்பில்; 2010 இல் வெளியிட்டது. அவரது 'கேண்மை' என்னும் கட்டுரைத் தொகுப்பு 2018 இல் வெளியானது. சாந்தனின் படைப்புகள் 'சாந்தனின் எழுத்துலகம்' (2006), 'சாந்தனின் படைப்புலகம்' (2021) என்னும் பெயர்களில் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பில் ஆர்வங்கொண்ட இவர் நாவல், சிறுகதை, கவிதை என்பவற்றை மொழிபெயர்த்துள்ளார். பிரெஞ்ச் விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளரான ஜூல் வேர்ண் எழுதிய Journey to the Centre of the Earth நாவலை ஆங்கிலம் வழியாக 'பூமியின் மையத்திற்கு ஒரு பயணம்' என்னும் பெயரில் 2006இல் இவர் மொழிபெயர்த்துள்ளார் உலகச் சிறுகதைகள் பதினெட்டின் ஆங்கிலம் வழி மொழிபெயர்ப்புகள் 'என் முதல் வாத்து' என்ற தலைப்பிலான தொகுப்பாகவும் நாற்பது கவிதைகளின் ஆங்கிலம் வழி மொழிபெயர்ப்பு 'கனவெல்லாம் எதுவாகும்?' என்ற தொகுப்பாகவும் முறையே 2016, 2017ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன.

அதேபோல சாந்தனின் படைப்புகள் உலகமொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.. அவரின் 'நீக்கல்கள்' எனும் கதை கணையாழியில் பிரசுரமாகி வரவேற்பைப் பெற்றமையைத் தொடர்ந்து Illustrated weekly of India இல் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரசுரமானது. எஸ்.ராஜசிங்கம், ஏ.வி.பரத் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அவரது ஆரம்பகாலத் தமிழ்க் கதைகள் நான்கின் தொகுப்பு Oddumma and other Stories| என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன. அதேபோல 'முளைகள்', இராக்குருவி' என்னும் இரு கதைகளும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கபட்டப்பட்டுப் பிரசித்திபெற்ற பெங்குயின் பதிப்பகத்தாரின் 'நவீன இலங்கைச் சிறுகதைகள்' எனும் தொகுப்பில் வெளியிடப்பட்டன. 1999இல் இவரது சிறுகதைகள் பதினெட்டு விமல் சாமிநாதனால் மொழிபெயர்க்கப்பட்டு 'மினிஸ்ஸூ சக மினிஸ்ஸூ' என்ற பெயரில் வெளிவந்தன. வங்காள மொழியில் பெயர்க்கப்பட்ட அவரது ஆக்கங்களும் அவர் பற்றிய கட்டுரைகளும் சேர்ந்த Kfhgnahg;| என்னும் நூல் இவ்வாண்டு ஜனவரியில் கொல்கத்தாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது. மேலும் மூன்று கதைகள் கலாநிதி வித்தாலி ஃபூர்ணிகாவால் ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. தவிர பத்துக்கு மேற்பட்ட கதைகள் நனி சூராலும் நான்கு கதைகள் அஷோக் கன்னாவாலும் ஹிந்தியில்; மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இன்றும் படைப்பிலக்கிய முயற்சியிலும் இலக்கிய சமூக அசைவுகளிலும் சளைக்காது ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர் சாந்தன்.

## மதிப்புறு முனைவர், சொல்லே

ஆசிரியர், விரிவுரையாளர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், அரங்க விமர்சகர், ஆய்வா சமூகசேவையாளர் செயற்பாட்டாளர், பல விருதுகளுக்குச் சொந்தக்காரர், எளிமை இனிமையும் கலந்துருவான நல்ல மனிதர், காலத்தையும் வெளியையும் கச்சிதமா கையாளும் கடின உழைப்பாளி இத்தகு பல்பரிமாண ஆளுமைகளின் கூட்டு வடிவ சோ.ப.

1939ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14ஆம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பிறந்தவர்தான் சோ.ப என நன்கறியப்பட்ட சோமசுந்தரம்பிள்ளை பத்மநாதன். யாழ்ப்பா இந்துக் கல்லூரியில் கல்வி கற்ற இவர் வித்துவான் கார்த்திகேயனிடம் தமிழையும், செ யூனிஸ்ட் கார்த்திகேசுவிடம் ஆங்கிலத்தையும் இயைபுறக் கற்றுத்தேர்ந்தார். பலாலி ஆசி கலாசாலைக்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் முதன்மை மாணவராகத் தேறி கலா கு.சிவப்பிரகாசம் மற்றும் பண்டிதர் க.சச்சிதானந்தம் ஆகிய பேராளுமைகளிடம் கற் வாய்ப்பினைப் பெற்றார். உளவியலில் கலாநிதிப் பட்டம் பெற்ற முதலாவது இலங்கைய பேரறிஞருமான சிவப்பிரகாசமே தனது எதிர்காலம் பிரகாசமாக அறிவொளியைப் பாய் யவர் எனப் பெருமைப்பட்டுக்கொள்ளும் சோ.ப. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல மாணிப் பட்டத்தினையும், ஆங்கிலம் கற்பிப்பதற்குப் பிரசித்திபெற்ற ஐக்கிய இராச்சிய ப லைக்கழகத்தில் உலகப் புகழ்பெற்ற மொழியியல் அறிஞரும் ஆங்கிலமொழிக் கலை ளஞ்சியத்தை உருவாக்கியவருமான டேவிட் கிறிஸ்ரலின் வழிகாட்டலில் ஆங்கிலம் கற் தலுக்கான பிரயோக மொழியியலில் டிப்ளோமா பட்டத்தினையும், யாழ்ப்பாணப் பல்கலை கழகத்தில் கல்வி டிப்ளோமாப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

பதினெட்டு ஆண்டுகள் ஆங்கிலமொழி ஆசிரியராகவும், பதின்மூன்று வருடங்கள் வி ரையாளராகவும், பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராகவும், அளப்பெரிய கல்விப்ப யினை ஆற்றினார். அத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கி மற்றும் மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறைகளுக்கான வருகைதரு விரிவுரையாளராக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகவும் கடமையாற்றின

வடக்கிருத்தல், நினைவுச் சுவடுகள், சுவட்டெச்சம் முதலான கவிதைத் தொகுதிகள் அவ கவி ஆளுமைக்குச் சாட்சிகளாக விளங்குகின்றன .

சுயபடைப்பாக்கச் செயற்பாட்டுக்கு அப்பால் மொழிபெயர்ப்பு மற்றும் ஆக்க மீளாக்கச் செ பாடுகளிலும் தன்னை ஆத்மார்த்தமாக ஈடுபடுத்திக் கொண்டார். தமிழ், ஆங்கிலம் மற் சிங்களம் ஆகிய மொழிகளில் அவருக்கு இருக்கும் தகைசார் புலமையும் ஆளுமை பிரெஞ் மொழியிலிருந்த ஈடுபாடும் இதற்கு வாய்ப்பாக அமைந்தது. இலங்கை, இந்தி ஆபிரிக்கா, இலத்தின் அமெரிக்கா மற்றும் பிரெஞ்சு நாட்டுக் கவிஞர்களின் தேர்ந்தெ

## தமிழ்ச் சமூகத்தின் உயிர்ப்பான இலக்கியச்சாட்சி குந்தவை

ஈழத்துத் தமிழ்ப் பெண் எழுத்தாளர்களுள் கவனத்துக்குரிய முதன்மையான படைப்பா ளியாக விளங்குபவர் இரா.சடாட்சரதேவி என்ற இயற்பெயரை உடைய குந்தவை . தொண்டைமானாற்றில் 14.03.1941 இல் பிறந்த இவர் 1963 இல் ஆனந்தவிகடன் பத்திரிகையில் எழுதிய முத்திரைக்கதை மூலம் எழுத்துலகில் புகுந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திலும் இடைநிலைக்கல்வியை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியிலும் கற்றவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற இவர் அங்கிருந்த சூழலிலேயே படைப்புலகில் முகிழ்த் தவர். புத்தளத்திலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் ஆசிரியராகப் பணியாற்றியவர். இ ஆசிரியராகப் பணியாற்றிய போது 1990 ஆம் ஆண்டு விசேட சுயவிருப்பு ஓய்வுத்தி

ஆனந்தவிகடன், கணையாழி ஆகிய தமிழ்நாட்டு இதழ்களிலும் சரிநிகர். மூன்றாவது ளிலும் தனது சிறுகதைகளை வெளியிட்டவர். இவர் எழுதிய பதின்மூன்று கதைகள் " ரிலும் ஒன்பது சிறுகதைகள் "ஆறாத காயங்கள்"(2016) என்ற பெயரிலும் வெளி வெளியீடாக வந்த "காலத்தின் குரல்கள்"(1964) தொகுப்பில் உள்ள "மனிதத்துவம்" மைக்காலத்தில் ஜீவநதி இதழில் இவருடைய மேலும் சில சிறுகதைகள் பிரசுரமாகியுள்

இலக்கியங்கள் ஆழ்ந்த அனுபவங்கள் இல்லாமல் எழுதப்படமுடியாதவை என்ற கரு சிறுகதைகளைத் தந்துள்ளார். நேரில் பார்த்த உணர்நோக்குடனேயே இவருடைய கதை எஸ்.பொ " தமிழ்ச்சமுதாயத்தை ஆட்டிப்படைக்கும் அவலங்கள், அவசரங்கள், விசன ரங்கள் ஆகியவற்றில் இருந்து தம்மை அந்நியப்படுத்திக்கொள்ளாமல் அதில்வாழும் நகர்த்துகின்றார்" என்று குறிப்பிடுகின்றார்.

மூத்த எழுத்தாளர் சட்டநாதன், குந்தவையின் சிறுகதைகளை பின்வருமாறு சிலாகிக் றுவரும் புத்தம் புதிய சொற்கள் யதார்த்தத்தை வழியவிடும் அவற்றின் இயல்பு என்ப றன. படைப்புகளுக்கு மெல்லிய திரையாக போர்வையாக மனோரதியக் கசிவு அழகுக்

இவருடைய சிறுகதைகளில் அதிகம் சிலாகிக்கப்படும் சிறுகதைகளாக பெயர்வு, யோ திற்காய், பயன்படல், வீடு நோக்கி, திருவோடு , கோழிக்கறி, புழுக்கம், ஊழியமும் ஊ ஆகியன விளங்குகின்றன. தமிழ்நாட்டின் பிரபலமான விமர்சகர் வெங்கட் சாமிநாத கமில்லை ஆனால் மிகுந்த தேர்ச்சி பெற்ற எழுத்து. அபாயங்கள் நிறைந்த சூழலில் நீ களையும் மீறி அங்கு பிடிவாதமாக வாழ்ந்துவரும் குந்தவையின் அடங்கிய குரலும் அ அவரது எழுத்து அலங்காரங்களோ உரத்த குரலோ ஆவேச உணர்வோ அற்றது. அவரது எழுத்தும் அவரைப் போலவே விசேடமானது. அவரது நிதானம் அலட்டல் இன் தன. அவரிடம் ஒரு பரிகாச உணர்வும் இழையோடியிருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …ர அடையாளங்கள்

ஆய்வாளர்,
எளிமையும்
கச்சிதமாகக்
ட்டு வடிவமே

ண்ணையில்
யாழ்ப்பாண
ழயும், கொம்
ாலி ஆசிரிய
தேறி கலாநிதி
ரிடம் கற்கும்
ங்கையரும்,
யைப் பாய்ச்சி
கத்தில் கலை
ராச்சிய பல்க
ழிக் கலைக்க
கிலம் கற்பித்
ப் பல்கலைக்

ங்கள் விரிவு
கல்விப்பணி
இலக்கியம்
பாளராகவும்
யாற்றினார்.

்கள் அவரது

ாக்கச் செயற்
கிலம் மற்றும்
ஆளுமையும்
க, இந்தியா,
தேர்ந்தெடுக்

## …லேர் உழவர் சோ.ப



கப்பட்ட பல கவிதைகளை ஆங்கிலத்திலிருந்து தமிழ்மொழிக்கு மாற்றம் செய்ததோடு தமிழ்ப் படைப்பாளிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை, சிறுகதை மற்றும் நாடகப் பிரதிகளை தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழியாக்கம் செய்துள்ளார். இதற்கு African Poetry, Thennilankai Kavithai, s_anmugalingam: Three Plays, Heaven with Hell, Tamil s_ort Stories from Sri Lanka, Sri Lankan Tamil Poetry, Thennasiak Kavithakal, முதலிய ஆக்கங்கள் முக்கியமானவை. அத்தோடு இவரது தேர்ந்தெடுக்கப்பட்ட பல கவிதைகள் ஆங்கிலம், சிங்களம், மலையாளம் முதலான பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதுமாத்திரமன்றி கலை, இலக்கியம், மொழி, பண்பாடு, சமயம் குறித்து ஆழமான ஆய்வுகளை மேற்கொண்டு தேசியம் மற்றும் சர்வதேச ரீதியாக நிகழ்ந்தேறிய ஆய்வரங்குகளில் கலந்துகொண்டு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தார். இதன்மூலம் ஒரு படைப்பாளி என்பதற்கும் அப்பால் ஆய்வுச் சிரத்தை மிக்க ஒரு புலமையாளராகவும் தன்னை நிலைநிறுத்தியுள்ளார். ஆங்கிலத்திலும் தமிழிலும் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை அவர் ஆற்றுகை செய்துள்ளார். தமிழ்மொழியில் நிகழ்த்தப்பட்ட அவருடைய ஆய்வுக்கட்டுரைகள் நோக்கு என்ற தொகுதியாகவும் ஆங்கிலமொழிக் கட்டுரைகள் என்ற தொகுதியாகவும் வெளிவந்துள்ளன.

இவையாவற்றுக்கும் அப்பால் சமூக ஈடுபாடு கொண்ட சமூக சேவையாளனாகவும் செயற்பாட்டாளனாகவும் இயங்கி வருகின்றார். காலமே பதறும் வகையில் நேரத்தைத் தன் கைகயில் பிடித்து, இயங்கும் வெளியை கர்ச்சிதமாகக் கையாளும் சோ.ப.வைப் போல் கடின உழைப்பாளியைக் காண்டல் அரிது. எமது மண்ணில் அருகிவரும் அரிதான மானிட ஆளுமைகளுள் வைத்தெண்ணப்படும் ஒருவர்.

வயது எண்பதானாலும் வற்றாத கலையார்வம் கொண்ட இந்தப் பேராளுமை இலக்கியத்துக்கான அரச விருது, ஆளுநர் விருது மற்றும் கலாபூஷண விருது முதலான விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இவையாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் இவரது ஆளுமையினை போற்றி தமிழ் இலக்கியத்திற்கான 'மதிப்புறு முனைவர்' பட்டத்தை வழங்கிக் கௌரவித்ததுடன் தனது கௌரவத்தையும் உயர்த்திக்கொண்டது.

## ஈழத்து நவீனத்துவப் பன்முக ஆளுமை அ. யேசுராசா



எழுபதுகளில் ஈழத்து தமிழ்ச் சூழலில் உருவான புதிய எழுத்தாளர் தலைமுறையினரில் ஒருவர் யேசுராசா. அவர் தனித்துவமானவர். புதுக்கவிதை, சிறுகதை, விமர்சனம் என பல தளங்களில் இயங்கி வரும் இவர், ஓவியம், திரைப்படம், நவீன நாடகம் எனக் கலைமரபிலும் அதிக ஈடுபாடு உடையவர்.

யாழ்ப்பாணம், குருநகர் பிரதேசத்தில் அத்தனாஸ் - செபஸ்தியானா தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த இவர், குருநகர் சென் .ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையில் க.பொ.த. சாதாரண தரம் வரை பயின்ற பின் உயர்தரத்தை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் பயின்றார். பின் இலங்கை தபால் திணைக்களத்தில் 'அஞ்சல் அதிபரும் தந்தியாளருமாக' சேவையாற்றி ஓய்வு பெற்றார்.

இவர் எழுதிய 10 சிறுகதைகள் "தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும்" எனும் தொகுதியாக (1974, 1989) இரு பதிப்புகள் கண்டுள்ளன. இவரது கவிதைகள் 'அறியப்படாதவர்கள் நினைவாக' எனத் தொக்கப்பட்டு 1984 இலும் பின்பு எழுதிய கவிதைகளை இணைத்து அதே பெயரில் இரண்டாவது பதிப்பாக 2023 இலும் வெளிவந்தன. இவருடைய பத்தி எழுத்துகள் 'தூவானம்' (2001) 'பதிவுகள்' (2003) நினைவுக் குறிப்புகள் (2016)' என மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவை தவிர இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் 'குறிப்பேட்டிலிருந்து' (2007'அங்குமிங்கு மாயம்' (2021)' எனும் தலைப்புகளில் வெளிவந்துள்ளன. திரைப்படம் சார்ந்து 'நிழல்கள்' (2018 'திரையும் அரங்கும்' (2013) 'திரை உலா' (2023) எனும் நூல்கள் வெளிவந்துள்ளன. இவை தவிர ஈழத்தின் மிகக் காத்திரமாக வெளிவந்த அலை இதழில் முதல் 25 இதழ்களுக்கு நிர்வாக ஆசிரியராகவும் இணை ஆசிரியராகவும் இயங்கிய இவர் பின்பு ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். தமிழ் இதழியல் வரலாற்றில் அலைக்குத் தனியிடம் உண்டு. இதன்பின் மூடுண்ட யுத்த மேகத்தினுள் இருந்த யாழ்ப்பாணத்தில் இளைய கவிஞர்களுக்கான 1994-1995 காலப்பகுதிகளில் 'கவிதை' எனும் இதழை வெளியிட்டார். இளைய கவிஞர்களிடையே கவிதைப் போட்டி வைக்கப்பட்டு பரிசிலும் வழங்கப்பட்டது. இது அவரின் தனிப்பட்ட முயற்சி என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல 2003 -2006 வரையும் பின்பு 2016 இலும் 'தெரிதல்' இதழ் வெளி வந்தது. மிகச் சிறிய அளவில் காத்திரமான விடயங்கள், நிகழ்வுகள் பற்றிய குறிப்புகள், கறாரான விமர்சனங்களை தாங்கிய, 2000 பிரதிகள் அச்சடிக்கப்பட்ட இதழாக 'தெரிதல்' வெளிவந்தது. 'திசை' எனும் வார ஏட்டுக்கு (1989-1990) ஆசிரியராக மு. பொ. வும் இவர் துணை ஆசிரியராகவும் இருந்து பணியாற்றினர். இலக்கியம், விளையாட்டு உள்ளிட்ட பகுதிகளில் இவரின் பங்களிப்பு மிகச் சிறப்பாக குறிப்பிடத்தக்கது.

இவர் தொகுப்பாளர்களுள் ஒருவராக இருந்து வெளிவந்த நூல்களாக 'மரணத்துள் வாழ்வோம்' (1984) பதினொரு ஈழத்துக் கவிஞர்கள் (1985) தேடலும் படைப்புலகமும் (1987) என்பன காணப்படுகின்றன. காலம் எழுதிய வரிகள் (1994) இவர் பதிப்பாசிரியராக இருந்து வெளிவந்த நூலாகும். விருதுகள் பல கதவைத் தட்டிய போதும் தன் கொள்கைக்கும் தனக்கும் பொருத்தப்படாதவற்றைப் புறந்தள்ளியவர். இலங்கை சாகித்தியமண்டல சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருது 1975, தொலைவும் இருப்பும் ஏனைய கதைகளும், வடக்குக் கிழக்கு மாகாண சபையின் பண்பாட்டுத் திணைக்கள சிறந்த நானாவித நூல் விருது 2002, தூவானம், வடக்குக் கிழக்கு மாகாணசபையின் பண்பாட்டுத் திணைக்கள சிறந்த மொழியாக்க நூல் விருது 2003, பனிமழை) யாழ்ப்பாண உலகத் திரைப்பட விழா 'வாழ்நாள் சாதனையாளர்' விருது 2015 கனடாத் தமிழ்த் திரைப்பட மேம்பாட்டு அமையத்தின், கலைக்குரிசில் கே.எஸ். பாலச்சந்திரன் விருது 2015 குருநகர் சமூகசேவை அமைப்பு (கனடா, அமெரிக்கா) வாழ்நாள் சாதனையாளர் விருது 2016 என்பன அ.யேசுராசுவுக்கு கிடைத்து, அந்த விருதுகள் தம்மை மகிமைப்படுத்தின.



படைப்பா
ந்தவை .
தவிகடன்
ர் தனது
பத்திலும்
லங்கைப்
ல் முகிழ்த்
பவர். இறுதியாக உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில்
ய்வுத்திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றார்.

ன்றாவது மனிதன், சக்தி, ஜீவநதி ஆகிய இதழ்க
தைகள் "யோகம் இருக்கிறது"(2002) என்ற பெய
் வெளிவந்தன. பேராதனைப் பல்கலைக்கழக
த்துவம்" என்ற சிறுகதையும் தொகுப்பில் அண
ரமாகியுள்ளன.

ன்ற கருத்தினை வழிமொழிந்து குந்தவை தனது
டைய கதைகள் எழுதப்பட்டுள்ளன. இதனால்தான்
ள், விசனங்கள், விக்கினங்கள், துக்கங்கள், துய
வாழும் ஒரு உயிர்ப்புள்ள சாட்சியாகக் கதையை

சிலாகிக்கின்றார். "இவருடைய எழுத்தில் பயின்
பு என்பன படித்த மாத்திரத்தில் பெரிதும் கவர்கின்
பு அழகுக்கு அழகு சேர்ப்பதை நாம் அறிவோம்"

வு, யோகம் இருக்கிறது, இணக்கம், இடமாற்றத்
மும் ஊதியமும், நாடும் நம் மக்களும், பாதுகை
ாமிநாதன் கூறுகிறார், "குந்தவை எழுதியது அதி
ழலில் நீண்ட பல வருடங்களாக போரின் அழிவு
ரலும் அமைதியும் நிதானமும் விசேடமானவை.
ற்றது. குந்தவை மிக விசேடமான எழுத்தாளர்.
டல் இன்மை, தேர்ச்சி எல்லாம் என்னைக் கவர்ந்

## இறையியல்பணியோடு தமிழுக்கும் தொண்டாற்றிய பேராயர் ஜெபநேசன்



பேராயர். கலாநிதி. எஸ். ஜெபநேசன் 1940 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் பிறந்தார். பள்ளிப்படிப்பை டிறிபேர்க் கல்லூரியிலும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பெற்று 1959 ஆம் ஆண்டு பேராதனைப்பல்கலைக்கழகம் சென்றார். 1962 ஆம் ஆண்டு பொதுக்கலைப் பட்டதாரியாக வெளியேறி கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் தமது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். 1969 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் குழுவில் சேர்ந்து 1986 ஆம் ஆண்டு அதன் துணையதிபராகவும் 1988 ஆம் ஆண்டு அதன் அதிபராகவும் 1993ஆம் ஆண்டு தென்னிந்திய திருச்சபைப் பேராயராகவும் நியமிக்கப்பட்டார்.

பொதுக்கலைப் பட்டதாரிப் படிப்பை முடித்த பின் கல்வி டிப்ளோமா படிப்பை நிறைவு செய்தார். மெய்யியல், தமிழ், ஆங்கிலம் என்னும் துறைகளில் முதுகலைமாணிப் படிப்பை பூர்த்தி செய்தார். 1977 ஆம் ஆண்டு மதுரையில் உள்ள இறையியற் கல்லூரியில் சேர்ந்து இரண்டு வருடம் கற்று இறையியல் மாணி (bachelor of divinity) என்ற படிப்பை நிறைவு செய்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வட்டுக்கோட்டை செமினரி பற்றிய ஆய்வினை மேற்கொண்டு 1987ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டம் பெற்றார்.

பேராயர் ஜெபநேசன் பதினான்கு நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் ஐந்து ஆங்கிலத்திலும் ஒன்பது தமிழிலும் எழுதப்பட்டுள்ளன. சில தமிழ் நூல்களை ஆங்கிலத்திலும் சில ஆங்கில நூல்களைத் தமிழிலும் மொழிபெயர்த்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தோடு நெருங்கிய தொடர்புடைய பேராயர் ஜெபநேசன் பதினாறு வருடங்கள் அதன் பேரவை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். தற்பொழுது தமிழ், மொழிபெயர்ப்பு, கிறிஸ்தவ நாகரிகம் என்னும் துறைகளில் பகுதிநேர விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். வேலூர் மருத்துவக்கல்லூரி, பெங்களூர் இறையியற் கல்லூரி, மதுரை இறையியற் கல்லூரி, செரம்பூர் கல்லூரி என்பவற்றின் ஆட்சிக்குழு உறுப்பினராகப் பேராயர் பணியாற்றியுள்ளார். 2010 ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலம் இவருக்கு சாகித்திய ரத்னா என்ற பட்டத்தை வழங்கியது. 2003 ஆம் ஆண்டு அமெரிக்க பிறின்ஸ்டன் இறையியல் கல்லூரி இவரை ஒரு வருடகாலம் வருகைதரு புலமையாளராக (visiting scholar) இருக்கும் படி அழைத்தது.

சென்னை பாரதி சங்கம் பாரதிதொடர்பான இவரது புலமையைக் கௌரவித்து 2012 ஆம் ஆண்டு பாரதி விருதை இவருக்கு வழங்கியது. பேராயர் ஜெபநேசன் சில வருடங்கள் ஆரிய திராவிட பாஷாவிருத்திச்சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். தற்பொழுது தந்தை செல்வா அறங்காவல் குழுவின் தலைவராகப் பணிபுரிகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய வெளிவிவகார அமைச்சின் முழுமையான அனுசரணையுடன் ஐரெக் திட்டத்தில் ஹைதராபாத்தில் உள்ள தெலுங்கான அரசாங்கத்தால் நிர்வகிக்கப்படும் டொக்டர் எம்.சி.ஆர். எச்.ஆர்.டி. நிறுவனத்தில் இலங்கை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகப் பணியாளர்களுக்கான ஊடக முகாமைத்துவம் தொடர்பான இருவார காலப் பயிற்சி 24.06.2024 தொடக்கம் 07.07.204 வரை இடம்பெற்றது. இந்தப் பயிற்சியில் இலங்கையிலிருந்து 29பேர் பங்குபற்றினோம். அது தொடர்பான தனது அனுபவங்களை உதயன் சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார் கட்டுரையாளர்.

டிலீப் அமுதன்

# அயல் தேசத்தில் சில நாள்கள்... 5


கொல்கொண்டா கோட்டை

எங்களிடமுள்ள அலைபேசிகள் வெளியிடத்தில் செயற்படத்தக்கதாக நாங்கள் உள்ளூர் சிம் வாங்கவில்லை. அதனால் குறிப்பிட்ட இடத்தைச் சொல்லி அந்த இடத்துக்கு எல்லோரும் 6.30 மணிக்கு வரவேண்டும் என்று சொன்னார்கள். அத்துடன் முக்கியமாக ஒரு விடயத்தையும் சொல்லியனுப்பினார்கள். இங்கு எந்தப் பொருளையும் வாங்க முன்னர் அதன் விலையைக் கேளுங்கள். 100 ரூபா என்று சொன்னால் நீங்கள் 25 ரூபாவுக்குத்தான் வாங்கவேண்டும். அந்த விலைக்கு இறங்கிவருவார்கள். வராவிட்டால் அதை வாங்காதீர்கள் என்ற எச்சரிக்கையைத் தந்தார்கள்.

அத்துடன் எங்களுடன் வந்த வழிகாட்டி சாமினாருக்கு அருகில் மிகப் பிரபலமான ஈரானிய சாய் (தேநீர்) வாங்கித்தந்தார். அத்துடன் கூடவே சுடச்சுட ஒஸ்மானிய பிஸ்கட்டும் கிடைத்தது. ஈரானிய சாயின் சுவை எங்களூர் பால் தேநீரிலிந்து சிறிது வேறுபட்டிருந்தது. அவர்கள் தூக்கிக்கொண்டாடும் அளவுக்கு பெரிய வித்தியாசமாக இருக்கவில்லை. ஹைதராபாத்தில் பல இடங்களில் சாய் வழங்கப்படும் கோப்பையின் அளவு பற்றி குறிப்பிட்டாகவேண்டும். பெரும்பாலும் பேப்பர் கப்பிலேயே அவை வழங்கப்பட்டன. அதில் ஆகக் கூடியது 10 மில்லி மீற்றர்தான் கொள்ளளவு இருக்கும். அவ்வளவு குறைவாகவே அங்கு சாய் வழங்கப்பட்டது. அது அவர்களின் வழக்கமாக இருந்தது.

அதை எடுத்துக்கொண்டு சாமினார் அருகில் நின்று படம் எடுப்பதற்கு வாய்ப்புத் தேடினோம். ஏனெனில் அங்கு அந்தளவு கூட்டம். நாம் தனித்துப் படம் எடுக்க வாய்ப்பில்லை என்ற நிலையில் சேர்ந்து நின்று படம் எடுத்தோம். அதை முடித்துக் கொண்டு நாங்கள் தமிழர்கள் 4 பேரும் தனியாக சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம்.

ஒரிஜினல் முத்து என்று சொல்லி பிளாஸ்ரிக் முத்தைக் கொடுத்து ஏமாற்றிவிடுவார்கள் என்று எச்சரித்து அனுப்பியதால், அந்தப் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை. 'பங்கில்ஸ்' - காப்புகளுக்கு அந்த இடம் மிகப் பிரபல்யமான இடம். வகைவகையான காப்புகள் அங்கு குவிக்கப்பட்டிருந்தன. நாம் எதையும் வாங்கவில்லை. எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வந்தோம். குறித்த நேரத்துக்கு முன்னதாகவே நாம் பேருந்தில் ஏறிவிட்டோம். சகோதர மொழி நண்பர்கள் சிலர் அங்கு பொருட்களை கொள்வனவு செய்தார்கள். குறிப்பாக பயணப் பைகளை வாங்கியிருந்தார்கள். இலங்கை ரூபாவில் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பைகளை. அங்கு இலங்கைப் பெறுமதியில் 4 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்திருந்தார்கள். அதைப்போன்று தரமான சப்பாத்துகளையும் வாங்கியிருந்தார்கள். எல்லோரும் பேருந்துக்கு வந்து சேர இரவு 6.45 மணியாகியிருந்தது. அங்கிருந்து நிறுவனத்தை நோக்கி பேருந்து புறப்பட்டது. இரவு நேரம் இன்னமும் வாகன நெரிசல் அதிகமாகவே இருந்தது. இரவு 8.30 மணிக்கு அண்மையாக நாங்கள் எங்கள் 'கோதாவரி ஹொஸ்டலை' வந்தடைந்தோம். இங்கு முக்கியமானதொன்றையும் குறிப்பிடவேண்டும். ஹைதராபாத்திலும் சரி தெலுங்கானாவின் ஏனைய இடங்களிலும் நான் சந்தித்த அந்த இடத்து மக்களைப் பார்க்கும் போது அவர்கள் யாழ்ப்பாணத்தவர்கள் போன்றே இருப்பதாகத் தோன்றியது. தோற்றவேறுபாட்டையோ, வித்தியாசத்தையோ அவர்களிடம் என்னால் உணரமுடியவில்லை. அவர்கள் பேசினால் மாத்திரமே தெலுங்கு என்கின்ற வித்தியாசம் தெரிந்தது. யாழ்ப்பாணத்தில் வீதிகளில் சுற்றித் திரியும் போது நாம் எதிரே சந்திப்பவர்களைப்போன்றே நடை, உடை, பாவனை என்பன இருந்தது. பல தடவைகள், நான் தெலுங்கு மொழி பேசும் மாநிலத்தில் இருக்கின்றேன் என்பதை உணராமல் தமிழில் கதைக்க முற்பட்டேன். அவ்வளவு தூரம் அவர்கள் வேற்றினத்தவர்கள் என்பதை உணர்ந்துகொள்ள முடியவில்லை.


ஈரானிய சாய் (தேநீர்)

## நான்காம் நாள்

வழமையான காலைச் செயற்பாடுகளை முடித்துக் கொண்டு எமது வகுப்பறைக்குச் சென்றோம். அன்றைய தினம் ஊடகத்துறையினர் அறிந்திருக்கவேண்டிய ஒளிப்பதிவு தொடர்பான கற்கை . அதன் வளவாளராக வந்தவர் ஹைதராபாத்தில் பிரபல்யமான சிறிபகதுல்லா பிகி. அவர் தன்னைப்பற்றிய அறிமுகத்தில், சென்னையில் ஊடகப் பட்டப்படிப்பை மேற்கொண்டதாகக் குறிப்பிட்டார்.

ஊடகப் பட்டப்படிப்பை சென்னையில் மேற்கொண்ட காலத்தில் இலங்கையிலிருந்து பலர் வந்து அங்கு படித்ததாக அவர் குறிப்பிட்டார்.

அன்றைய தினம் இரண்டாவது அமர்வாக ஏ.ஐ. தொழில்நுட்பம் பற்றிய கற்கை நடைபெற்றது. பேராசிரியர் ராகுல் தாஸ் முன்னெடுத்தார். எங்களில் பலருக்கு ஏ.ஐ. தொழில்நுட்பம் பற்றிய பரிச்சயம் குறைவாக இருந்ததால், அவரது கற்கைநெறி கொஞ்சம் சிரமமாக இருந்தது. ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் ஆரம்ப படிநிலைகளைப் பற்றி எங்களுக்குத் தெளிவுபடுத்தினார். அன்றைய தினம் மதிய உணவுகளை முடித்துக் கொண்டு 'ரி - ஹப்புக்கு' புறப்பட்டோம்.

ரி ஹப்பை தெலுங்கான ஹப் என்றும் சொல்வார்கள். அது தகவல் தொழில்நுட்பத்துறையின் முக்கியமான இடம். 'ரி ஹப்' கட்டடங்களே புத்தாக்க முறையில் அமைக்கப்பட்டிருந்தன. அதன் கட்டடக்கலையைப் பார்த்தால் அனைவரும் வியந்துபோவர். ஆந்திராவிலிருந்து தெலுங்கானா 2014 ஆம் ஆண்டு பிரிந்தது. 2015 ஆம் ஆண்டு ரி ஹப் ஆரம்பிக்கப்படுகின்றது. தெலுங்கான மாநில அரசு எதிர்காலத்துக்கு என்ன தேவை என்பதைச் சரியாகக் கணித்து இதை ஆரம்பித்து இன்று உலகளவில் தகவல் தொழில்நுட்பத்துறைக்கான மைய அடையாளப் புள்ளியாக 'ரி - ஹப்பை' மாற்றியிருக்கின்றது. உலகின் பல்வேறு நாடுகளும், பல முன்னணி நிறுவனங்களும் தங்களுக்குத் தேவையான பணியாளர்களைக்கூட இங்கிருந்து உள்ளீர்க்கும் நிலைமை காணப்படுகின்றது. இது இந்தியாவின் முக்கியமான கண்டுபிடிப்பு மையம். 'ரி- ஹப்பின்' செயற்பாடுகளைப் பார்வையிடும்போது அங்கு பணிபுரியும் பெரும்பாலானவர்கள் 20 - 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்பதையும் அறிந்துகொள்ள முடிந்தது. அங்கிருந்து இன்னொரு பழமை வாய்ந்த முக்கியமான இடத்துக்குப் புறப்பட்டோம். அதுதான் 'கொல்கொண்டா கோட்டை'. போகும் வழியில் சுடச்சுட சாய் (தேநீர்) அருந்தினோம்.

சுமார் ஒரு மணி நேரப் பயணத்தின் பின்னர் கொல்கொண்டா கோட்டையைச் சென்றடைந்தோம். அங்கு எம்முடன் சுற்றுலாப்பயணிகளுக்கான வழிகாட்டி ஒருவர் இணைந்துகொண்டார்.

காலை 9 மணியிலிருந்து பி.ப. 6 மணி வரையில் இந்தக் கோட்டையைப் பார்வையிடலாம். இந்தியர்களுக்கு இந்திய மதிப்பில் 25 ரூபாவும் வெளிநாட்டவருக்கு இந்திய மதிப்பில் 300 ரூபாவும் நுழைவுச் சீட்டுப்பணமாக அறவிடப்படுகின்றது. முகப்பை பார்த்தால், படங்களிலும், இணையவிளையாட்டுகளிலும் வரும் கோட்டைச் சுவர்களைப்போன்று இருக்கும்.

இந்தக் கோட்டை 7 கிலோ மீற்றர் சுற்றளவைக் கொண்டது. காக்கத்தேயர்களால் இந்தக் கோட்டை மண் கோட்டையாக 12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. பின்னர் பஹ்மனி சுல்தானால் பலப்படுத்தப்பட்டு விரிவுபடுத்தப்பட்டு தற்போதைய கோட்டை கட்டப்பட்டது. இதுவே குதுப் ஷாஹி வம்சத்தின் தலைநகராக மாறியது. 1518 ஆம் ஆண்டு முதல் 1687ஆம் ஆண்டு வரை இப்பகுதியை ஆண்ட குதுப் ஷாஹி ஆட்சியாளர்களின் கீழ் கொல்கொண்டா அதன் உச்சத்தை எட்டியது. அவர்கள் கோட்டையை ஒரு பெரிய கோட்டை வளாகமாகவும், செழிப்பான வைரத்துக்கான வர்த்தக மையமாகவும் உருவாக்கினர். 1687 இல் முகலாயப் பேரரசர் ஔரங்கசீப்பால் கைப்பற்றப்பட்ட பின்னர் கோட்டை வீழ்ச்சியடைந்தது.

கோட்டையினுள் நாங்கள் பிரவேசிப்பதற்கு முன்னர் வரலாற்றைச் சுருக்கமாக சுற்றுலா வழிகாட்டி எடுத்துரைத்தார். கோட்டையின் உட்பக்கத்தில் ஒரு இரும்புக் குற்றி இருக்கின்றது. அதை யாராவது தூக்க முடியுமா என்று சுற்றுலா வழிகாட்டி எங்கள் குழுவினரைப் பார்த்துக் கேட்டார். சகோதரமொழி நண்பர்கள் சிலர் தூக்க முயற்சித்தனர். ஒருவராலும் அதைத் தூக்க முடியவில்லை. அது 240 கிலோ எடையுள்ளது என்று பின்னர்தான் சுற்றுலா வழிகாட்டி கூறினார்.

அங்கிருந்து சிறிது தூரம் நகர்ந்ததும் கோட்டையின் உயரமான கட்டடத்தினுள்(கட்டடம் என்று சொல்வதை விட கோபுரம் என்பதே பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன்) சென்றோம். அது விசேடமான இடம் என்று வழிகாட்டி குறிப்பிட்டார்.

*(பயணம் தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்கென்ன பதில்?

## வடக்கு மாகாண ஆளுநருக்கு!

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் செயலகமும் வேறு சில அலுவலகங்களும் 'எக்ஸ்போசர் விசிட் 'என்ற பேரில் வேறு மாகாணசபைகளுக்கு சுற்றுலா செல்லப்போவதாக அறியக் கிடைத்திருக்கிறது. இலங்கை அரசுக்கு வரி செலுத்தும் குடிமகனாக நான் உங்களிடம் சில கேள்விகளை எழுப்ப விரும்புகிறேன்.

1. வடக்கு மாகாணத்துக்கு மத்திய அரசு அனுப்புகின்ற மூலதன ஒதுக்கீடுகள் வடக்கு மாகாணத்தில் பிரயோசனமாக செலவழிக்கப்படுகின்றனவா?

2. அந்த மூலதன ஒதுக்கீடுகளில் என்று கூறி சுற்றுலா சென்று பல லட்சம் பணத்தை செலவழிப்பது சரியானதா?

3. இந்த மூலதன ஒதுக்கீட்டு பணத்தை கொண்டு வடக்கு மாகாணத்தில் செய்வதற்கு பயனுள்ள வேறு வேலைத்திட்டங்கள் இல்லையா?

4. கடந்த காலத்திலும் இப்படி பல லட்சம் ரூபா செலவழித்து சுற்றுலா சென்றதால் வடக்கு மாகாணத்துக்கு என்ன பலன் கிடைத்தது? அந்த செலவுக் கணக்குகள் உங்களுக்கு தெரியுமா?

5. நாட்டு பொருளாதார நிலையில் இந்தச் சுற்றுலா செலவுகள் கட்டாயம் தேவையா?

6. எத்தனையோ ஏழைகள் ஓலைக் குடிசைக்குள் இருக்க அரச ஊழியர்களுக்கு அரசாங்கக் காசில் சுற்றுலா தேவையா?

7. அரச ஊழியர்களின் சுற்றுலாவுக்கு மக்கள் வேர்வை சிந்தி உழைத்த காசில் எடுத்த வரிப்பணத்தை செலவழிப்பது ஊழல் இல்லையா?

8. 8.கடந்த ஊழல் ஆட்சிகளில் அப்படி செலவழித்த போது எவரும் கேள்வி கேட்க முடியவில்லை. இப்போது ஊழலுக்கு எதிரான ஆட்சியில் வந்த ஆளுநரா நீங்களும் இந்த வீண் செலவுகளை அனுமதிக்கலாமா?

**இப்படிக்கு,**
**ஊழலுக்கு எதிரான ஒருவன்**

(உதயன்- சஞ்சீவிக்கு வந்த வாசகர் ஒருவரின் மனக்குமுறலே இந்தக் கடிதம்)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

# அரசியல்...

ஆனால் அதைத் தமிழ்த் தேசிய அரசியலுக்கு எதிரான சக்திகள் மிகவும் தந்திரமாக திட்டமிட்டு பயன்படுத்துகின்றன. எப்படியென்றால், தமிழ் மக்கள் தெரிந்தெடுத்த பிரதிநிதிகளையே அவர்கள் முன் குற்றவாளிகளாகக் காட்டி, சிறுமைப்படுத்தி, கீழ்மைப்படுத்தி தமது சொந்த பிரதிநிதிகளை தமிழ் மக்கள் நம்ப முடியாத ஒரு சூழலை அவர்கள் ஏற்படுத்துகிறார்கள். இது எங்கே கொண்டு போய்விடும்? தமது சொந்தப் பிரதிநிதிகளின் மீது நம்பிக்கையிழந்த மக்கள் தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் அலைக்குப் பின் போகக்கூடிய வாய்ப்புகளை அதிகப்படுத்தும். தமிழ் வாக்குகள் தமிழ்த் தேசிய அரசியலுக்கு வெளியே போகும் வாய்ப்புகளை அதிகப்படுத்தும். இதை இப்படி எழுதுவதற்காக இந்தக்கட்டுரையானது மதுச்சாலை அனுமதிகளைப் பெற்ற அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தக் கூடாது என்று கூறுவதாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. தமது வாக்காளர்களுக்குப் பொறுப்புக்கூறும் தகுதியற்றவர்கள் அனைவரையும் தமிழ் அரசியலில் இருந்து அகற்ற வேண்டும். ஆனால் அதனை தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் இருந்து செய்ய வேண்டும். தமிழ் மக்களை ஒரு இனமாகத் திரட்டுவது;தேசமாகத் திரட்டுவது என்ற நோக்கு நிலையிலிருந்து செய்ய வேண்டும். தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கும் நோக்கு நிலையிலிருந்து செய்ய முடியாது. தமிழ் மக்களைச் சிதறடிக்கும் அரசியல்வாதிகள் அதைச் செய்வது என்பது தமிழ்த் தேசிய அரசியலை சிதைக்க முற்படும் வெளித் தரப்புகளுக்குத் தான் சேவகம் செய்யும். மாறாக தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் நோக்கு நிலையில் இருந்து தமிழ்த்தேசியப் பரப்பில் உள்ள நேர்மையற்றவர்கள், கண்ணியமற்றவர்கள், நயவஞ்சகர்கள், நசியல் பேர்வழிகள், வழிந்தோடிகள், டீலர்கள் போன்றவர்களைத் தமிழ்மக்கள் தோற்கடிக்க வேண்டும்.

# போர்க்குற்றவாளிக்கு பாலூட்டும் தேசிய மக்கள் சக்தி!

இனக்குரலோன்

இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க , துறைமுக அதிகார சபையின் தலைவராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். திருகோணமலை 'கன்சைட்' வதை முகாமில் கடற்படை அதிகாரிகளால் பணத்துக்காக படுகொலை செய்யப்பட்ட 11 கொழும்பு தமிழ் மாணவர்கள் தொடர்புபட்ட வழக்குடன் சம்பந்தப்பட்ட கடற்படை அதிகாரிகளுக்கு உதவிய மூத்த அதிகாரியாக இவர் அடையாளம் காணப்பட்டு இருந்தார். குறிப்பாக இந்த வழக்கின் பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான சுமித் ரணசிங்க பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் அவரை சிரேஷ்ட பதவி நிலைக்கு அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க பதவியுயர்த்தி இருந்தார்.

அதேபோன்று தனது மேலதிகாரிகளுடன் பரிமாறிய இரகசியக் கடிதம் ஒன்றின் மூலம் பிணையிலிருந்த சுமித் ரணசிங்கவை கடற்படையின் புலனாய்வுப் பணியில் ஈடுபடுத்த அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க ஏற்பாடு செய்து இருந்தார்.

இது மாத்திரமின்றி பிணையில் விடுவிக்கப்பட்ட சுமித்துக்கு ஆயுதமேந்திய பாதுகாப்பு வழங்கவும் அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க உத்தரவு பிறப்பித்திருந்தார். சுமித் ரணசிங்கவுக்கு எதிராக சாட்சியமளித்த கடற்படை அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்களை உளவு பார்க்கும் வசதியையும் அவர் சுமித்துக்கு வழங்கி இருந்தார்

அதே சமயம் 2009-2012 காலப்பகுதியில் திருகோணமலை 'கன்சைட்' வதை முகாமில் நடந்த பல விடயங்கள் தொடர்பாக அறிந்திருந்த அதிகாரிகளில் ஒருவராக அட்மிரல் சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்கவை, சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பு அடையாளம் காட்டி இருந்தது. இந்த நிலையிலேயே, இலங்கையின் அரச நிறுவனங்களின் தலைவர்களாக தங்கள் கட்சி உறுப்பினர்களையும் நண்பர்களையும் நியமித்து வரும் தேசிய மக்கள் சக்தி , அதன் தொடர்ச்சியாக அட்மிரல் சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்கவை இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக நியமித்து உள்ளது. தண்டிக்க வேண்டிய போர்க்குற்றவாளிகளை அதிகாரத்தில் நியமித்து பாதுகாக்க முயன்ற கோத்தாபய ராஜபக்ச கால நுட்பத்தை, தேசிய மக்கள் சக்தி கையிலெடுப்பதை எந்த வகையிலும் சகிக்க முடியாது. அதிகாரத்துக்கு வந்து வெறும் இரண்டு வாரம் தானே என சப்பைக்கட்டு நியாயம் சொல்ல முடியாது. வசந்த கரன்னகொட உட்பட உயர்நிலைக் கடற்படை அதிகாரிகள் தொடர்புட்பட்ட, படுகொலைகளை விசாரித்த நிஷாந்த சில்வாவை கொல்ல கடற்படை உயரமட்டத்தில் நடத்த சதிகள் அம்பலமாகியிருந்த போதும் பின்னணி இதுவரை கண்டறியப்படவில்லை .அட்மிரல் சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்க உட்பட அதிகாரிகளை நீதியின் முன் நிறுத்தினால் நிஷாந்த சில்வா கொலை முயற்சி வழக்கு மட்டுமின்றி கடற்படை வலையமைப்பு சம்பந்தபட்ட பல நூறு கடத்தல் காணாமலாக்குதல்,கொலை என்பவற்றின் மர்ம முடிச்சுகளைக் கண்டறிய முடியும். ஆனால் அதற்கு மாறாக தேசிய மக்கள் சக்தி, குற்றப் பின்னணி கொண்ட படையினரை உயர் பதவிகளில் அமர்த்தி அழகு பார்ப்பதை அவசரமாகச் செய்வதன் மர்மம் என்னவென்று புரியவில்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













# அகங்காரத்தின் பரிசு

சித்திரக் கதை




நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.




உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org